


30 ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com




நதி: 30 | பாலம்: 22 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | NOVEMBER 15, 2020

# அமெரிக்க அதிபர் தேர்தல்!

Joe Biden இம்முறை நடைபெற்ற தேர்தலில் நாடு முழுவதுமாக 78.2 மில்லியன் வாக்குகளைப் பெற்று Donald Trump பெற்ற 72.8 மில்லியன் வாக்குகளை விட 5.4 மில்லியன் அதிகப்படியான வாக்குகளை எடுத்துள்ளார். 46ஆவது அமெரிக்க அதிபர் தேர்வுக்கான தேர்தல் 2020 நொவெம்பர் 3இல் நடைபெற்றது. அமெரிக்காவிலும் கனடா விலும் பெரும்பாலான ஊடகங்கள் இம்முறை ஜனநாயகக் கட்சியின் சார்பில் தேர்தலில் நிற்கும் Joe Biden அபார வெற்றியீட்டுவார் எனவும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த தற்போதைய அதிபர் Donald Trump தோல்வி அடைவார் எனவும் கூறிவந்தன.

அமெரிக்க அதிபர் தேர்தல் நாடு தழுவிய அதிக வாக்குகளைப் பெற்றவர் யார் என்பதில் தங்கியிருக்க வில்லை. அமெரிக்க அதிபர் தெரிவு ஒவ்வொரு மாநிலத்திலும் தனித்தனியே அதிக வாக்குகளைப் பெற்றவர் மூலமே நிர்ணயிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாநிலமும் தங்களுக்கு உரிய விதிமுறைப் படியே அதிபர் தேர்தலை நடத்தித் தமது மாநிலத்தில் வென்றவரை உத்தியோக பூர்வமாக அறிவிக்கின்றன. அமெரிக்காவில் உள்ள 50 மாநிலங்கள் மற்றும் Washington D.C. (51 மாநிலங்களும்) 2020 நொவெம்பர் 3இல் அதிபர் தேர்தலை நடத்தியது.

ஒவ்வொரு மாநிலமும் தமது மாநிலத்திலிருந்து அமெரிக்க நாடாளுமன்றத்திற்குத் (Congress) தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் (House of Representatives) மற்றும் மேற்சபை உறுப்பினர்கள் (Senators) எண்ணிக்கை அளவு தெரிவாளர்களைத் (Electors) தமது மாநிலத்தில் வெற்றி பெற்ற கட்சிக்கு வழங்குகின்றன. இரண்டு மாநிலங்கள் மட்டும் விகிதாசாரப்படி தெரிவானவர்களை வழங்குகின்றன. ஏனைய மாநிலங்கள் வென்றவருக்கு எல்லா தெரிவாளர்களையும் வழங்குகின்றன. 50 மாநிலங்கள் மற்றும் Washington D.C. இலிருந்து 438 நாடாளுமன்ற உறுப்பினர்களும் 100 மேற்சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவதால் 50 மாநிலங்கள் மற்றும் Washington D.C. ஆல் அதிபர் தேர்தலில் வழங்கப்படும் மொத்தத் தெரிவாளர்களின் எண்ணிக்கையும் 538 ஆகும். இதில் 270 தெரிவாளர்களின் ஆதரவைப் பெறும் கட்சியின் அதிபர்வேட்பாளரே அமெரிக்கா



வின் அதிபராகத் தெரிவு செய்யப்படுவார். நாடு தழுவிய தேர்தலைக் கண்காணிப்பதற்கு அல்லது தேர்தலின் முடிவுகளை வெளியிட நாடு தழுவிய ஒரு பொது அமைப்பு கனடா மற்றும் இலங்கையில் இருப்பதுபோல் அமெரிக்காவில் இல்லை. அந்தந்த மாநில அரசுகளே தமது மாநிலத்தில் நடைபெறும் தேர்தல்களை கண்காணிக்கின்றன.

அதிபர் தேர்தல் நொவெம்பர் 3இல் நடைபெற்றாலும் அதில் தெரிவு செய்யப்படும் தெரிவாளர்கள் டிசம்பர் 14இல் தான் தமது மாநிலங்களின் தலைநகரில் கூடி அமெரிக்க அதிபரைத் தெரிவு செய்வதற்கு வாக்களிப்பர். அவ் வாக்குகளை 2021 ஜனவரி 6இல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மேற்சபை உறுப்பினர்கள் இரண்டையும் கொண்ட சபை எண்ணி உத்தியோகபூர்வமாக அமெரிக்க அதிபரின் தெரிவை அறிவிப்பர். அதன்பின்னர் புதிய அதிபர் 2021 ஜனவரி 20இல் மதிய நேரம் சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்பார்.

நொவெம்பர் 3இல் நடைபெற்ற தேர்தலின் முடிவை 50 மாநிலங்கள் மற்றும் Washington D.C. அறிவித்தாலும் நாட்டின் அதிபரின் தெரிவு உத்தியோக பூர்வமாக ஜனவரி 6இல் நாடாளுமன்றம் அறிவிக்கும் வரை ஊடகங்கள் காத்திருப்பது இல்லை. அவை தாமாகவே மாநிலங்களின் தெரிவிலிருந்து யார் அதிபராக வெற்றியீட்டியவர் என 270 தெரிவாளர்களின் ஆதரவைப் பெறப்போறவரை தமது அதிபர் தெரிவாகக் கூறிவிடும்.

50 மாநிலங்கள் மற்றும் Washington D.C. உத்தியோகபூர்வமாக அறிவித்த தெரிவாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் CNN ஊடகம் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த Joe Biden 306 தெரிவாளர்களின் ஆதரவையும், குடியரசுக் கட்சியைச் சேர்ந்த தற்போதைய அதிபர் Donald Trump 232 தெரிவாளர்களின் ஆதரவையும் பெறுவர் எனவும் அறிவித்துள்ளது.

இதனால் 306 தெரிவாளர்களின் ஆதரவைப் பெற்று ஜனநாயக கட்சியைச் சேர்ந்த Joe Biden அமெரிக்காவின் 46ஆவது அதிபராக 2021 ஜனவரி 20இல் பதவி யேற்பார் என CNN ஊடகம் தெரிவித்துள்ளது.

1942 நொவெம்பர் 20இல் Joseph Biden அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தில் Scrantonஇல் பிறந்தார். இவரது தந்தையார் Joseph Biden (Sr) ஒரு வாகன விற்பனையாளர். இவரது தாயார் Jean Biden. Joe Bidenஇற்கு ஒரு தங்கையும் இரண்டு தம்பிமாரும் உள்ளனர்.

வாய் பேசுவதற்குத் தடுக்குப்படும் Joe Biden இளமையில் கண்ணாடி முன் நின்றுகொண்டு கவிதைகளைத் திரும்பத் திரும்ப வாசித்ததாலேயே தனது பேச்சைத் தற்போது திருப்திகரமாகப் பேசக் கூடியதாக உள்ளது என்கிறார். தற்போது Delaware மாநிலத்தில் வாழ்ந்துவரும் Joe Biden, Delaware பல்கலைக்கழகத்தில் படித்துப் பின்னர் Syracuse பல்கலைக் கழகத்தில் 1968இல் சட்டத்துறையில் பட்டம் பெற்றார்.

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)


























# கிருஷ்ணர் பிறந்த புண்ணிய பூமி மதுரா – திவ்யதேசம்



செல்வராஜ், டெல்லி
www.tamilcartrip.com
WhatsApp: +91.986.816.5715

டெல்லியில் இருந்து 180 கி.மீ தொலைவில் உத்தரபிரதேசம் மாநிலத்தில் உள்ள மதுரா கிருஷ்ணர் பிறந்த புண்ணிய பூமியாகும். இங்குள்ள சிறைச்சாலையில் கிருஷ்ணரின் தாய்-தந்தையான தேவகி மற்றும் வாசுதேவரை தனது தாய்மாமன் கம்சன் கைதிகளாக வைத்திருந்தபோது ஸ்ரீ பாலகிருஷ்ணர் பிறந்தார். பிற்காலத்தில் முகலாய மன்னன் ஔரங்கசீப்பால் இந்த சிறைச்சாலை அழிக்கப்பட்டாலும் ஸ்ரீ கிருஷ்ணர் பிறந்த இடம் என்று நம்பப்படும் சிறைசாலையின் ஓர் அறை மட்டும் இன்றும் அதன் மெருகு குலையாமல் பாதுகாக்கப்பட்டு பூஜிக்கப்படுகின்றது.

புராணங்களின்படி ராஜா கம்சன், கிருஷ்ணனின் தங்கை யோக்மாயா தேவியை தனது தங்கை தேவகியின் எட்டாவது குழந்தையாக எண்ணிக் காலைப் பிடித்து தூக்கி வீசி எறிந்து கொன்றதும் மற்றும் கண்ணன் தனது தாய்மாமன் கம்சனை வதம்செய்து மாய்த்ததும் இந்த மதுராவில் தான்.

மதுராவில் கிருஷ்ணருக்கு அர்ப்பணிக்கப்பட்ட பல ஆலயங்கள் இருப்பினும் மிகவும் முக்கியமாக தரிசிக்க வேண்டியவை யாதெனில் : கிருஷ்ணர் பிறந்த சிறைச்சாலை மற்றும் அதன் அருகில் உள்ள யோக்மாயா தேவி, கேசவ்தேவ், ராதா-கிருஷ்ணன் கோயில்கள் மற்றும் விஷ்ணுவுக்கு அற்பணிக்கப்பட்ட கீதா கோயில்.



ஆயர்பாடி- மதுராவின் தென்கிழக்கில் 12 கி.மீ தொலைவில் யமுனா நதிக்கரையில் அமைந்துள்ள இந்துக்களின் புனித நகரமாகும். புராணங்களின்படி, பால கிருஷ்ணன் சிறைச்சாலையில் பிறந்த உடனே அவரைக் கூடையில் வைத்து வாசுதேவர் யமுனை நதியைக் கடந்து ஆயர்பாடியில் உள்ள நந்தகோபன் வீட்டில் வைத்துவிட்டு அதற்குப் பதிலாக யசோதாவின் பெண் குழந்தை யோக் மாயாவை எடுத்துச் சென்றார். பால கிருஷ்ணர் தனது குழந்தைப் பருவத்தை தனது வளர்ப்பு தாய் யசோதாவுடன் ஆயர்பாடி மாளிகையில் கழித்தார்.

விருந்தாவன் - மதுராவில் இருந்து 15 கி.மீ தொலைவில் கிருஷ்ணர் கோபியர்களுடன் ஆடி-பாடி விளையாடிய விருந்தாவனில் தரிசிக்க வேண்டிய முக்கியமான ஆலயங்கள் யாதெனில் : ராதா-கிருஷ்ணனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பிரேம் கோயில், கிருஷ்ணரின் பாங்கே பிஹாரி கோயில், சிகப்பு கற்களால் உருவாக்கப்பட்ட கோவிந்த் தேவ் கோயில், தாஜ் மஹாலை போன்று முற்றிலும் வெள்ளை பளிங்கு கற்களால் உருவாக்கப்பட்ட ஒன்பது மாடிகளைக் கொண்ட பாகல்-பாபா என்னும் கிருஷ்ணர் கோயில் மற்றும் திராவிட கட்டிடக்கலையை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்ட ஸ்ரீ ரங்கநாதர் கோயில்.

கோவர்த்தன் - மதுராவில் இருந்து 21 கி.மீ தொலைவில் உள்ள கோவர்த்தன் மிகவும் பிரபலமான புனித தலமாக விளங்குகின்றது. இந்திரனின் கோபத்தினால் உருவான கடும் மழை மற்றும் காற்றில் இருந்து நகரத்தையும் அங்கு வாழும் மக்கள் மற்றும் மாடுகளையும் காப்பாற்றுவதற்காக பகவான் கிருஷ்ணர் கோவர்தன் மலையை தனது சுண்டு விரலில் தூக்கி நிறுத்தி குடையாகப் பிடித்துக் கொண்டதாகப் புராணம் கூறுகின்றது.

பர்சானா - கோவர்தனில் இருந்து 20 கி.மீ தொலைவில் ராதா பிறந்த இடமாக கருதப்படும் பர்சானா உள்ளது. இங்கு சிகப்பு மற்றும் வெள்ளை கற்களால் பிரமாண்டமாக உருவாக்கப்பட்ட ராதா ராணி கோயில் உள்ளது.

பகவான் விஷ்ணுவின் பத்து அவதாரங்களில் ஒன்றாகக் கருதப்படும் கிருஷ்ண அவதாரத்துடன் தொடர்புடைய திருத்தலங்களான மதுரா, ஆயர்பாடி, விருந்தாவனம் மற்றும் கோவர்தன் சென்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணனை தரிசனம் செய்து வருவதன் மூலம் 108 திவ்யதேசங்களில் இரண்டு திவ்யதேசங்களை பார்வையிட்டதாக



(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)

# அமெரிக்க...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

1970இல் தான் வாழும் New Castle Countyஇன் நகரசபை உறுப்பினராகத் (Councillor) தெரிவு செய்யப்பட்டார். அதன்பின் 1972இல் தனது மாநிலமான Delawareஇன் மேற்சபை (Senator) உறுப்பினராக 29ஆவது வயதில் தெரிவானார். ஆறு தடவை மேற்சபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட Joe Biden பின்னர் 2009ஆம் ஆண்டில் முன்னாள் அதிபர் Barack Obamaஇற்கு உதவி அதிபராகப் பதவி ஏற்பதற்காகத் தனது மேற்சபை உறுப்பினர் பதவியைத் துறந்தார். 2016ஆம் ஆண்டுவரை உதவி அதிபராகப் பதவி வகித்த Joe Biden, 2019 ஏப்பிரலில் 2020 அதிபர் தேர்தலில் தான் போட்டியிடப் போவதாக அறிவித்தார்.

Joe Bidenஇன் முதல் மனைவி Neilia Biden அவரது மகள் Naomi ஒரு பாரிய வாகன விபத்தில் 1972 டிசம்பரில் காலமானார்கள். அந்த விபத்தில் காயப்பட்ட இரண்டு மகன்களான Beau மற்றும் Hunterஐயும் தனது மேற்சபை உறுப்பினர் பதவியுடன் அவர் பராமரித்து வந்தார். பின்னர் 1977 ஜுன் இல் Jill Jacobsஐ திருமணம் செய்தார். அவர்கள் இருவருக்கும் Ashley என்று ஒரு மகள் இருக்கிறார்.

2020 ஒகஸ்ற் 11இல் Joe Biden தனக்கு உதவி அதிபராகக் கடமையாற்றக் கலிபோர்ணியா மாநில மேற்சபை உறுப்பினரான கமலா ஹறிஸ் ஐத் தெரிவு செய்தார்.

Joe Bidenஇன் உதவி அதிபர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட கமலாதேவி ஹறிஸ் கலிபோர்ணியா மாநிலத்தில் Oaklandஇல் 1964 ஒக்ரோபர் 20இல் பிறந்தவர். கமலாவின் தாயார் தமிழ்நாட்டைச் சேர்ந்த சியாமளா கோபாலன். அவரின் தந்தை Jamaica நாட்டைச் சேர்ந்த Donald Harris.



கமலாவிற்கு ஏழு வயதாக இருக்கும்போது அவரின் பெற்றோர் பிரிந்துவிட்டனர். அதன்பின் தன் தாயாருடன் வாழ்ந்த கமலா, Howard பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானம் மற்றும் பொருளாதாரத் துறையில் 1986ஆம் ஆண்டு பட்டம் பெற்றார். பின்னர் கலிபோர்ணியா பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் 1989ஆம் ஆண்டு பட்டம் பெற்று சட்டத்தரணி ஆனார். கமலா ஹறிஸ் 2014ஆம் ஆண்டில் சட்ட நிர்வாக நிறுவன உரிமையாளரான Douglas Emhoffஐத் திருமணம் செய்தார்.

கமலா ஹறிஸ் அமெரிக்காவின் முதல் பெண் உப அதிபர், முதல் ஆபிரிக்க அமெரிக்க சமூகத்தைச் சேர்ந்த உப அதிபர், முதல் இந்திய அமெரிக்க சமூகத்தைச் சேர்ந்த உப அதிபர் என்ற சாதனைகளை நிலைநாட்டியுள்ளார். அமெரிக்காவின் வரலாற்றிலேயே மக்களால் தெரிவு செய்யப்பட்டு அதி உயர் பதவி வகிக்கும் பெண்மணியாகக் கமலா ஹறிஸ் பெருமை பெறுகிறார்.

அமெரிக்க சரித்திரத்திலேயே இம்முறை நடைபெற்ற அதிபர் தேர்தலில் அதிக மக்கள் வாக்களித்துள்ளனர். 2020ஆம் ஆண்டு நடைபெற்ற அமெரிக்க அதிபர் தேர்தலில் 239.2 மில்லியன் அமெரிக்கர்கள் வாக்களிக்கத் தகுதியானவர்களாக இருந்துள்ளனர். 2020 நொவெம்பர் 3இல் நடைபெற்ற தேர்தலில் 161 மில்லியன் மக்கள் (66.8%) வாக்களித்துள்ளனர். இவர்களில் 50.9%ஆனோர் Joe Bidenஇற்கும் 47.3%ஆனோர் Donald Trumpஇற்கும் வாக்களித்துள்ளனர்.

2016ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் 138 மில்லியன் மக்கள் (60.2%) வாக்களித்திருந்தனர். இதற்கு முன்னர் 1900ஆம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தலில் 73.7% ஆனவர் வாக்களித்திருந்தனர். அமெரிக்க வரலாற்றில் 1876இல் நடைபெற்ற தேர்தலிலேயே அதிகூடிய வீதமான மக்கள் 82.6% வாக்களித்திருந்தனர். 1876இல் அமெரிக்காவில் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை உத்தியோக பூர்வமான முடிவுகள் எல்லா இடங்களிலும் அறிவிக்கப் பட்டிருந்தாலும், சில மாநிலங்களில் தபால் மூலம் நடைபெற்ற வாக்களிப்புகளில் குளறுபடிகள் நடைபெற்றன எனக் கூறித் தற்போதைய அதிபர் Donald Trump இதுவரை தனது தோல்வியை ஒப்புக் கொள்ளவில்லை. இம்முறை 92 மில்லியன் வாக்காளர்கள் தபால் மூலம் வாக்களிப்பதற்கான வாக்குச்சீட்டுக்களைப் பெற்றிருந்தாலும் நொவெம்பர் 6ஆம் திகதிவரை 65.5 மில்லியன் தபால் மூலமான வாக்குகள் பெறப்பட்டுள்ளன. சில மாநிலங்களில் தபால் மூலமான வாக்குகள் நவம்பர் 23ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். 2016ஆம் ஆண்டு நடந்த அமெரிக்க அதிபர் தேர்தலில் 33.5 மில்லியன் தபால் மூலமான வாக்குகள் அளிக்கப்பட்டன.

தபால் மூலமானவாக்களிப்பில் முறையீனங்கள் நடைபெற்றுள்ளன என்றும், பல வாக்குகள் எண்ணும் நிலையங்களில் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களை எண்ணுவதை கண்காணிக்க விடவில்லை எனவும் பல வழக்குகள் குடியரசுக் கட்சியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அமெரிக்க அரசியல் சட்டப்படி டிசெம்பர் 8ஆம் திகதிக்கு முன்னர் மாநில நீதிமன்றங்கள் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கவேண்டும். அதற்குப் பின்பே மத்திய அரசிற்குரிய அதிஉச்ச நீதிமன்றத்தில் வழக்குகளைத் தாக்கல் செய்யலாம். அதி உச்ச நீதிமன்றமும் தமது தீர்ப்பை தெரிவாளர்கள் டிசம்பர் 14ஆம் திகதி தமது வாக்குகளை அளிக்க முன்னர் தெரிவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தேர்தலில் ஜனநாயகக் கட்சிக்கு முடிவுகள் மாறியுள்ள நான்கு மாநிலங்களிலும் குடியரசுக்கட்சி வழக்குத் தாக்கல் செய்துள்ளது. Pennsylvania (20 தெரிவாளர்கள்), Georgia (16 தெரிவாளர்கள்) Arizona (11 தெரிவாளர்கள்) மற்றும் Wisconsin (10 தெரிவாளர்கள்) ஆகிய நான்கு மாநிலங்களில் Pennsylvania உட்பட மூன்று மாநிலங்களில் எண்ணிக்கை மாறுபட்டுக் குடியரசுக் கட்சி வென்றால் தான் Donald Trump தனது அதிபர் பதவியை தப்பவைக்கலாம். இதற்கு நடைமுறைச் சாத்தியமில்லை எனப் பெரும்பாலான ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

Pennsylvaniaஇல் 63 ஆயிரம் வாக்குகளாலும், Wisconsinஇல் 20 ஆயிரம் வாக்குகளாலும், Georgiaஇல் 14 ஆயிரம் வாக்குகளாலும் மற்றும் Arizona இல் 10 ஆயிரம் வாக்குகளாலும் தான் Joe Biden முன்னணியில் இருந்தார். நாடு தழுவிய அளவில் Joe Biden 5.4 மில்லியன் அதிகமான வாக்குகளைப் பெற்றிருந்தாலும் மூன்று மாநிலங்களில் Joe Biden பெற்ற 87,193 அதிகப்படியான வாக்குகளே அவரது வெற்றிக்குக் காரணமாக இருக்கின்றது.



ஏற்கனவே இருந்த மேற்சபை உறுப்பினர்களுடன் இம்முறை நடைபெற்ற தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட மேற்சபை உறுப்பினர்களும் சேர்ந்து குடியரசுக் கட்சிக்கு 50 உறுப்பினர்களும் ஜனநாயகக் கட்சிக்கு 48 உறுப்பினர்களும் உள்ளனர். Georgia மாநிலத்தில் ஒருவரும் 50%இற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெறாதபடியால் அந்த மாநிலத்திற்கான இரண்டு மேற்சபை உறுப்பினர்களுக்கான மீள் தேர்தல்கள் 2021 ஜனவரி 5இல் நடைபெற உள்ளது.

Globe and Mail ஊடகம் தேர்தல் இறுதி முடிவு எதுவாக இருந்தாலும் அமெரிக்க அதிபர் Donald Trump எல்லா ஊடகங்களினதும் கணிப்புக்களையும் முறியடித்துள்ளார் என்பது மிகவும் தெளிவாக தேர்தல் முடிவுகள் மூலம் வெளிக்காட்டப்பட்டுள்ளது. பெரும்பாலான ஊடகங்கள் ஒரு நீல அலை (Blue Wave) இம்முறை தேர்தலில் வீசும் என்று கூறியிருந்தன. தேர்தல் முடிவுகள் அது தவறு என நிரூபித்துள்ளது. கருத்துக் கணிப்பாளர்கள் மக்களுக்கு விளக்கம் சொல்ல வேண்டிய நிலையில் தற்போது உள்ளனர் எனத் தெரிவித்துள்ளது.

உலகளாவிய ரீதியில் கருத்துக்கணிப்பு சொல்லும் முடிவும் தேர்தலின் பின் வரும் முடிவும் முற்றாக மாறுவதனைக் காணக் கூடியதாக உள்ளது. இதனால் கருத்துக் கணிப்பை 'மாயமான்' என திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி தெரிவித்துள்ளார்.

TUTORING
Math / Science / English
Over 10 years of Experience (M.Sc., Mathematics)
University Math:
.CALCULUS 1,2 &3
.LINEAR ALGEBRA
Universtiy courses for: York,Ryerson,UOFT,UOIT, Waterloo and Mcmaster
*Grade 9:MPM-1D *Grade 10:MPM-2D
*Grade 11:MCR-3U(Functions)
*Grade 12:MHF-4U(Advanced Functions)
*Grade 12:MCV-4U(Calculus and Vectors)
GR.9/10:Science(SNC1D)/SNC2D
GR.11/12:Physics(SPH3U)/SPH4U
Chemistry(SCH3U)/SCH4U
University Courses:Calculus 1,2 &3 and Linear Algebra
* Learn from a person who holds masters degree in Mathematics(M.Sc,Maths)
* Limited students per session
Call today to find out more!
Δ Grade 1-8: Math/Science/English
Δ Grade 9-12: Math/Science (Academic, applied, IB and AP)
Δ Principles of Mathematics. Δ Calculus. Δ Vectors.
Δ Functions. Δ Advanced Functions.
PARAM JYOTHI ACADEMY
Online/In-Class sessions
647.426.6329
www.paramJyothiacademy.ca

# நாமும் நமது இல்லமும் 571

## ரொறொன்ரோ அடுக்குமனை



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

ரொறொன்ரோ பெரும்பாகத்திலும் அதனை சுற்றியுள்ள பாகத்திலும் ஆதன வியாபாரத்தில் நடைபெறும் நிகழ்வுகள் எதிர்பாராத ஒன்றாகவே காணப்படுகிறது. கோவிட்-19இன் பாதிப்பு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என ஆரம்பத்தில் எதிர்பார்த்த போதிலும் மார்ச், ஏப்ரல், மே 2020 மாதங்கள் முற்றாக மூடப்பட்டிருந்த நிலையில் சகலதும் முடக்கப்பட்டு இருந்தது. எனினும் சிறிது சிறிதாக நிலைமை மாறும்போது ஆதன வியாபார அலையும் அடங்கியிருந்த நிலை மாறி வீச்சு பெறத்தொடங்கியது. மாதாமாதம் விலை அதிகரிப்பு, வியாபார அதிகரிப்பு நிகழ்வதனை நாளாந்தம் காணக்கூடியதாக உள்ளது. அரசியலில் கருத்துக்கணிப்புகள் 'மாயமான்' போல ஆய்வாளர்களின் எதிர்வு கூறல்களும் பொய்க்கின்றன. காரணமற்ற காரியம் நிகழ்வதனைக் காணக்கூடியதாக உள்ளது.

ரொறொன்ரோவில் அடுக்குமாடி மனைகளின் வியாபாரமும் வாடகைக்கு கொடுத்தலும் இறுக்கமடைந்த நிலையில் பெரும்பாகத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும் நிலைமை மறுதலையாக காணப்படுகின்றது. அடுக்கு மனையை விட்டு வெளியேறியவர்கள் வீடுகளை நோக்கிப் படை யெடுப்பதனை, இன்றைய காலத்தில் நடைபெறும், அதிகப்படியான ஆதன வியாபாரத்திலிருந்து காணலாம். ஆனால் இதற்கு கோவிட்-19 காரணமாக இருந்தாலும் இது மட்டும் காரணமாகுமா?

வாடகையின் பெறுமதி 2019 ஒக்ரோபர் உடன் ஒப்பிடும்போது 9%இனால் குறைந்துள்ளது. அத்துடன் வாடகைக்கு கொடுப்பதற்காக, அதன் உரிமையாளர்கள் பலவிதமான ஊக்குவிப்புக்களையும், வாடகையாளர்களுக்குக் கொடுப்பதையும் காணலாம்.

முக்கியமாக இந்த இக்கட்டான நிலைமைகளுக்குக் காரணங்கள், நாட்டின் எல்லைகளைத் தாண்டி கனடாவிற்குள் வருவதற்கான இறுக்கம், புதிய வரவாளர்களின் வருகை குறைந்திருத்தல், உல்லாசப் பயணிகள் வருகையில் ஏற்பட்ட பாதிப்பு, மாணவர்கள் சொந்த வீட்டுக்கு அல்ல சொந்த நாட்டுக்கு திரும்பிச் சென்றிருத்தல் போன்றவற்றைக் கொள்ளலாம். வேறு காரணங்களும் இருக்கலாம்.

அத்துடன் ஏற்கனவே வாடகைக்குக் கொடுக்கப்படாமல் இருக்கும் ஆதனங்களுக்கு மேலதிகமாக இந்த வருடம் கட்டி முடிவடைந்து வாங்கியவர்களிடம் கொடுக்கப்பட இருக்கும் 23,000 அளவிலான ஆதனங்கள் மற்றும் 2021இல் கட்டப்பட்டு நிறைவுற இருக்கும் 22,434 புதிய ஆதனங்கள். இதனால் வாடகைக்கு மேலதிக மனைகள் அடுத்த வருடமும் வர இருக்கின்றது.



இந்நிலைமை அடுத்த வருடம் புதிதாக வரவிருக்கும் வரவாளர்களினால் ஓரளவு வாடகைக்கு எடுக்கப்படலாம் என எதிர் பார்க்கலாம். எனினும் இரண்டாவது அலையின் பாதிப்பு உலக நாடுகளிலும் கனடாவிலும் தொடர்ந்து அதிகரிப்பது இது நல்ல சகுனம் போலத் தெரிய வில்லை. 2020 நொவெம்பர் மாதத்தின் இரண்டாவது வாரத்தில் கோவிட்-19 இனால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 1000இற்கு மேலாகத் தொடர்ந்து மாறாமல் இருப்பது நல்லதாக இல்லை. இதனால் அரசு மார்ச் 2020இல் ஏற்படுத்திய நிலைமையை உருவாக்கினால் பொருளாதாரத்தில் மேலும் பெரிய பாதிப்பை நிச்சயம் ஏற்படுத்தும்.

ஏற்கனவே பொருளாதார நெருக்கடியில் இருக்கும் கனடியர்களுக்கு அவ்வாறான நிலைமை ஏற்பட்டால், அவர்களின் பொருளாதாரம் மிகவும் இக்கட்டான நிலைமையை அடையும். Halloweenஐ தொடர்ந்து ஏற்பட்ட கோவிட்-19 அதிகரிப்பு, தீபாவளி போன்ற கொண்டாட்டங்களும் கோவிட் இன் பாதிப்பை அதிகரிக்கச் செய்யலாம்.

ஆனால் இன்றைய நிலையில் ஒக்ரோபர் 2019உடன் ஒப்பிடும்போது ஆதன வியாபாரம் 25%இனால் அதிகரித்துள்ளது. அத்துடன் தனி வீடுகளின் விலையும் 14.8%இனால் அதிகரித்து சராசரி வீட்டு விலை $1,204,844 ஆகக் காணப்படுகிறது. பொதுவாக நொவெம்பர், டிசம்பர், ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்கள் ஆதன வியாபாரத்தில் மிகவும் மந்தமான மாதங்கள். இதுவரை நொவெம்பர் மாதம் அடுக்குமாடி தவிர்ந்த ஏனைய வகை ஆதனங்களின் வியாபாரத்தில் ஏறுமுகமே காணப்படுகின்றது. இந்நிலைமை எதிர்காலத்தில் தொடருமா? ஆய்வாளர்களுக்கும் பதில் தெரியவில்லை. புதிதாக ஆதனம் வாங்கும் மில்லெனியல் (Generation 'Y') காலத்தவர்

| Year | Born |
|---|---|
| Baby Boomers | 1946-1964 |
| Generation 'X' | 1965-1980 |
| Millennial /Generation 'Y' | 1981-1996 |
| Generation 'Z' | 1997-2012 |

களின் ஆதனம் வாங்கும் நடவடிக்கை பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். அத்துடன் Generation 'Z' காலத்தவர்களும் ஆதனத்தில் முதலிட ஆரம்பித்துள்ளனர். இவர்களின் இன்றைய வயது 23இற்குக் குறைவாகவே காணப்படு கின்றது. ஆதன முதலீடு எப்பொழுதும் நீண்ட காலத்தில் சிறப்பான முடிவுகளையே கொடுத்துள்ளது. இதுவே சரித்திரம்.




## கருப்பு, கறுப்பு – நிறத்தைக் குறிக்க எதைப் பயன்படுத்த வேண்டும்?

கருப்பு என்று ஒரு சொல் இருக்கிறது. அதற்கு என்ன பொருள் என்றால் 'பஞ்சம், வறுமையான காலகட்டம்' என்பதுதான் பொருள்.

காரிருள், கரி, கருமை, கருகிய.... இவை அனைத்தும் கறுப்பைக் குறிப்பதால் கருப்பு என்பது சரியாக இருக்காதா? பார்ப்போம்.

கறுப்பு என்பது நிறப்பெயர். கருமை என்பது பண்புப்பெயர். பண்புணர்த்தும் சொற்கள் மை விகுதி பெற்றுவரும் என்று அறிவோம். கறுமை என்று வராது. கருமை என்று வரும்.சிவப்பு என்று ஒரு நிறப்பெயர் இருக்கிறது. அதன் பண்புணர்த்தும் சொல் சிவமை என்றா வருகிறது? இல்லை. செம்மை என்று வருகிறது. வெளுப்பு, வெள்ளை என்ற நிறத்தின் பண்புக்கு வெண்மை என்ற சொல் பயில்கிறது. பச்சைக்குப் பசுமை. ஆக,கறுப்பு என்ற நிறத்தின் பண்பினை உணர்த்தும் சொல்லாகக் கருமை என்று வரும். ஒரு நிறப்பெயரின் பண்பை உணர்த்த வேறு சொல் பயிலும் என்பதை ஏற்றுக்கொண்டால் இந்த ஐயம் முடிவுக்கு வந்துவிடும்.

- கவிஞர் மகுடேசுவரன்

# பொருளாதாரம் முடக்கப்படாத பொறிமுறை அவசியம்!

- விகிர்தன் -

இலங்கையில் கொரோனா தொற்றின் இரண்டாவது அலை நாளாந்தம் அதிக தொற்றாளர்களை உருவாக்கி வருவதுடன், மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. இந்த சூழ்நிலையில் அரசியலும், மதம் சார்ந்த பிரச்சினைகளும் கூட மேலெழத் தொடங்கியுள்ளன.

கொரோனாவினால் ஏற்படும் மரணங்களை அரசாங்கம் மறைத்து வருவதாக எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கூறுகின்றது. அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான ஹரீன் பெர்ணான்டோ இதனை அடிக்கடி வெளிப்படுத்தி வருகின்றார். கொரோனா நோயாளிகள் வீதிகளில் இறந்து கிடப்பதாகவும் அரசாங்கம் இது குறித்து அக்கறையற்று நடந்துகொள்வதாகவும் அவர் நாடாளுமன்றத்திலும் தெரிவித்திருக்கின்றார்.

முடக்க நிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அதிகளவு நிவாரணங்களை வழங்க வேண்டும் எனவும், அரசாங்கம் அதனைக் கருத்தில் கொள்ளவில்லை என்றும் அக்கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச கூறுகின்றார்.

கொரோனாவை கட்டுப்படுத்த முழு நாட்டையும் முடக்க வேண்டும் என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனையாக உள்ளது.

இதேவேளை, கொரோனாவினால் உயிரிழக்கும் முஸ்லிம்களை தகனம் செய்ய அனுமதிக்க முடியாது என்றும், முஸ்லிம் மத முறைப்படி அடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் எனவும் நாட்டிலுள்ள அனைத்து முஸ்லிம் கட்சிகளும், முஸ்லிம் அமைப்புகளும் உரத்து குரல்கொடுத்து வருகின்றன.

ஜனாஸாக்களை புதைப்பது என்பது முஸ்லிம் மத நம்பிக்கையின் முக்கிய பகுதி என்றும் இதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்க வேண்டும் என்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறுகின்றார். மற்றுமொரு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் அரசாங்கத்தின் முடிவு வரும்வரை முஸ்லிம்களை பொறுமை காக்கும் படி கோரியுள்ளார்.

இந்த நிலையில் அரசாங்கத் தரப்பினர் தங்களின் சிந்தனைகள், ஆலோசனைகளின் அடிப்படையில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

முதலாவதாக- கொரோனா தொடர்பான உண்மைத் தகவல்களை அரசாங்கம் மறைக்கின்றது என்றால் அதற்கான ஆதாரங்களை குற்றம் சாட்டுபவர்கள் முன்வைக்க வேண்டும். கொரோனா தொற்று குறித்த தகவல்களை அரசாங்கம்



மறைக்கின்றது என்றோ, கொரோனா மரணங்களை சரியாக வெளிப்படுத்துதில்லை என்றோ சொல்லப் படுவதை பொதுவான அவதானிப்பில் ஏற்றுக் கொள்ள முடியாது. எனினும், இவை உடடியாக இல்லாமல் சில சமயங்கள் காலம் தாழ்த்தி வெளிப்படுத்தப்படுகின்றது என்று குற்றம் சாட்டப்பட்டால் அதனை ஏற்கலாம்.

அதேவேளை, கொரோனா தொற்று சமூக மட்டத்தில் இன்னும் பரவவில்லை என்று அரசாங்கத் தரப்பில் கூறப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாமலிருக்கின்றது.

கொரோனா தொற்றின் இரண்டாவது அலை மினுவங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் ஆரம்பமானது. ஒரேயொரு பெண் அடையாளம் காணப்பட்டு பின்னர் தொற்று வேகமாகப் பரவத் தொடங்கியது. எவ்வாறு குறித்த ஆடைத்தொழிற்சாலைக்குள் தொற்று புகுந்தது என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கும் வேளையிலேயே அடுத்ததாக பேலியகொட மீன் சந்தையில் மற்றுமொரு தொடர் ஆரம்பமானது. தெற்கிலும் மலையகப் பகுதிகளிலும் உள்ள மீன் சந்தைகள் தோறும் தொற்று அடையாளம் காணப்பட்டு அந்த சந்தைகள் மூடப்பட்டன. அது பின்னர் பொதுமக்களுக்குள்ளும் ஊடுவியது.

கொழும்பு நகரைத் தவிர ஏனைய பகுதிகளில் பரவிய தொற்று தற்போது ஓரளவிற்குக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. மேல் மாகாணத்தினுள் குறிப்பாக கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். மக்கள் அடர்த்தியாக வாழும் பகுதிகளில் கொரோனா தொற்று வேகமாகப் பரவுகின்றது என்பதற்கு இலங்கை மட்டும் உதாரணமல்ல. கொரோனா தொற்று வேகமாகப் பரவும் ஏனைய நாடுகளும் இதற்கு உதாரணம்.

இப்பகுதிகளை தனிமைப்படுத்தி தொற்றாளர்களை இனங்காண்பதே அவசியமான பணி. இவ்வாறு அடையாளம் காணப்படுவோர் சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவதும், ஏனையோர் தனிமைப்படுத்தப்பட்டு பரிசோதனைக்கு உட்படத்தப்படல் வேண்டும். அவர்கள் ஒன்றிற்கும் மேற்பட்ட தடவை பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவது சிறந்தது. இதனை சுகாதாரத் தரப்பினர் செய்து வருகின்றனர்.

இதேவேளையில், கொரோனா மரணங்கள் தற்போது அதிகரித்து வருகின்றமைதான் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. கடந்த மார்ச் மாதம் ஆரம்பித்த முதல் அலையிலும் பார்க்க இரண்டாவது அலையில் மரணங்கள் அதிகளவில் பதிவாகி வருகின்றன. இது தவிர்க்க இயலாத ஒன்றெனவே கூற வேண்டும். வயதானோர், ஏனைய நோய்களால் ஏற்கனவே பாதிக்கப்பட்டோர் கொரோனா வைரஸ் ஊடுருவியதும் உயிரிழக்கும் நிலை ஏற்படுகின்றது.

இன்றைய இந்த நிலைமையை கருத்திற் கொண்டு மிக அவதானமாகவே அரசாங்கம் அதன் நிர்வாகத்தை நடத்த வேண்டியுள்ளது. கொரோனா தொற்று ஒரு பாதிப்பு. அதேபோன்று இந்த தொற்றுப் பரவலால் ஏற்படும் பொருளாதார பாதிப்பு மற்றுமொரு சிக்கலாக உள்ளது. எனவே, முழு நாட்டையும் முடக்கி வைப்பது பொதுமக்களுக்கு மேலும் பாதிப்பினையே ஏற்படுத்தும்.

முதலாவது அலையின்போது, நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் அமல்படுத்தப் பட்டிருந்தது. இதனால் மக்கள் தங்கள் தொழில்களை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருந்ததை நாம் நேரடியாகவே பார்த்தோம். இன்று கொழும்பைத் தவிர ஏனைய பகுதிகளில் நாளாந்த தொழில் நடவடிக்கைகள் ஓரளவிற்கேனும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மழை பெய்ய ஆரம்பித்திருப்பதால் விவசாயிகள் பெரும்போக நெற்செய்கைக்கு ஆயத்தமாகி வருகின்றனர். இதனைக் குழப்பும் விதமாக நடவடிக்கைகளை மேற்கொள்வது ஏற்புடையது அல்ல.

ஆனாலும் மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்தை கட்டுப்படுத்துவது ஏனைய பகுதிகளுக்கு தொற்றுப் பரவாமலிருப்பதற்கு உதவும். வட மாகாணத்திற்குக் கொழும்பிலிருந்து வந்தவர்களினாலேயே தொற்றுப் பரவியது. இலங்கையில் கொரோனா தொற்று பரவாத மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டம் அடையாளப்படுத்தப்பட்டது. பின்னர் ஒரு வாரத்திலேயே அங்கும் தொற்று தலைகாட்டத் தொடங்கியது. தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அரசாங்கத் தரப்பு தகவல் தெரிவிக்கின்றது. கொழும்பில் தொழில் புரிந்துவிட்டு வந்த ஒருவராலேயே கிளிநொச்சியில் தொற்று பரவியது. எனவே, மாவட்டங்களுக்கு இடையில் போக்குவரத்து செய்பவர்களை கண்காணிக்கும் பொறி முறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

யாழ்ப்பாணத்திற்கு வெளி மாவட்டங்களில் இருந்து வருவோர் தங்களை பதிவு செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. வெளிமாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாணம் வருவோர் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டது. இவை சரியாக நடைமுறைப்படுத்தப்படுவதாகத் தெரியவில்லை.

கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதுடன் மக்களின் பொருளாதார நடவடிக்கைகளையும் வழமை நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்கின்ற வகையில் செயற்பட்டு வருவதாக அரசாங்கம் கூறுகின்றது. அரசாங்கம் அவ்வப்போது அறிவிக்கும் விடயங்கள் நடைமுறைக்கு வருவதில்லை என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். கொரோனா நிலைமையை பயன்படுத்தி அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் நாளாந்தம் அதிகரிக்கப்படுகின்றன. வர்த்தகர்கள் இந்த விடயத்தில் மோசமாக நடந்துகொள்கின்றனர். இதனை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதில்லை.

உதாரணத்திற்கு, மக்களின் பிரதான உணவுப்பொருளான அரிசிக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டு வர்த்தமானியும்

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514



OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# இளையோருக்கு ஒரு இலட்சம் காணித் துண்டுகளை பகிர்ந்தளிக்கும் திட்டம்!




இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு அரச காணிகளை பகிர்ந்தளிக்கும் திட்டம் ஒன்றை அரசாங்கம் அறிவித்துள்ளது. இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக அரச காணிகளில் முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஒரு இலட்சம் அரச காணித் துண்டுகளை இவ்வாறு இலவசமாகப் பகிர்ந்தளிப்பதற்கான திட்டமாக இது அமைந்துள்ளது.

இந்தக் காணிகள் எங்குள்ளன என்று பார்த்தால் வட மாகாணத்திலேயே உள்ளன. வவுனியா வடக்கு, மாந்தை கிழக்கு, மாந்தை மேற்கு, பளை, நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு மாங்குளம், கரைத்துரைப்பற்று ஆகிய பகுதிகளில் உள்ள காணிகளே இவ்வாறு இளையோருக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விண்ணப்பிக்கலாம் என்றும் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்ப படிவங்களும் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாறு காணிகளைப் பெறுவதற்காக இலங்கையில் பல பிரதேசங்களிலுள்ளவர்களும் விண்ணப்பம் செய்துள்ளதாக அறிய முடிகின்றது.

முதலில், ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி விண்ணப்பத்திற்கான இறுதி நாள் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் நவம்பர் 15ஆம் திகதி வரை அதனை நீடித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

வட மாகாணத்தில் உள்ளவர்கள் இறுதித் தருணத்திலேயே இதற்கு விண்ணப்பித்துள்ளனர். காரணம் ஏனைய பிரதேசங்களில் அதற்கான அறிவித்தல்கள் முறையாக மக்களுக்கு சென்று சேர்ந்துள்ளன. வடக்கில் மிகவும் தாமதமாகவே இந்த தகவல் மக்களுக்கு சென்றடைந்துள்ளது. இதற்கு வட மாகாணத்திலுள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அசமந்தப் போக்கே காரணமாகும்.

எனினும், இறுதித் தருணத்தில் இதற்கான அறிவித்தல்கள், விழிப்புணர்வு நடவடிக்கைகளை சமூக அக்கறையுள்ள இளைஞர்கள் சமூக வலைத்தளங்கள் ஊடாக வெளிப்படுத்தியுள்ளனர். யாழ். மாவட்டத்தில் ஒலிபெருக்கிகள் மூலமாகவும் இது அறிவிக்கப்பட்டது. இதனையடுத்துப் பல தமிழ் இளைஞர்கள் இதற்கான விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து கையளித்துள்ளனர்.

தொழில் முயற்சிகளை மேற்கொள்ள விரும்பும் இளையோருக்கு காணிகளும் வழங்கி அவர்களின் தொழில் முயற்சிக்காக உதவிகளும் அரசாங்கத்தினால் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உதாரணத்திற்கு விவசாயம் மற்றும், தோட்டச் செய்கையை மேற்கொள்ளும் இளையோருக்கு அதற்கான உதவிகள் அரசாங்கத்தினால் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது முறையாக நடைமுறைக்கு வந்தால் ஒரு சிறந்த திட்டமாகவே அமையும். ஆனால் இந்த திட்டத்திற்குப் பின்னால் அரசியல் உள்நோக்கங்கள் இருப்பதாகவும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

அரசாங்கம் தமிழ் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு வருவதாகத் தமிழ் அரசியல்வாதிகள் அவ்வப்போது குற்றம்சாட்டி வருகின்றனர். அவ்வாறான குடியேற்றங்கள் போர் முடிவுற்றதன் பின் நடைபெற்றுள்ளன என்பதும் உண்மையே. தொடர்ந்தும் இதனை நடைமுறைப்படுத்தும் நோக்கம் இருக்கின்றதென்பதையும் மறுக்க முடியாது.

இப்போது ஒரு இலட்சம் அரச காணித் துண்டுகளை இளையோருக்குப் பகிர்ந்தளிக்கும் திட்டத்தின் பின்னாலும் இவ்வாறானதொரு சூழ்ச்சித் திட்டம் இருப்பதாகத் தமிழர் தரப்பில் கூறப்படுகின்றது. இருக்கலாம். இதனை மறுப்பதற்கில்லை. ஆனால். இது நடந்து முடிந்ததன் பின்னர் மக்களைக் கூட்டி போராட்டங்களை நடத்துவது சரியான வழிமுறையாக இருக்காது.

தமிழர் தரப்பில் முறையானதொரு திட்டமிடல் இருக்க வேண்டும். சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளை தமிழ் தேசியம் சார்ந்து செயற்படும் அரசியல் கட்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலுள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று மக்களைக் கூட்டி போராட்டங்கள் முன்னெடுக்கப் பட்டன. ஆனால், விடுவிக்கப்பட்ட பல காணிகளில் இன்னமும் அதன் உரிமையாளர்கள் குடியேறவோ, அதனை பராமரிக்கவோ இல்லை. இக்காணிகளின் உரிமையாளர்கள் பலர் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்றனர். அவர்களின் உறவினர்களுக்கு அக்காணிகளை வழங்கவும் அவர்கள் முன்வருகின்றனர் இல்லை.



இவ்வாறாதொரு சூழ்நிலையில் தமிழ் பிரதேசங்களை தமிழர்களே நிரப்ப வேண்டும் என்று வெறுமனே சொல்லிக் கொண்டிருப்பது எவ்வாறு பொருந்தும்?

வடக்கில், வன்னிப் பிரதேசத்தில் அதிகளவு நிலப்பரப்பு உள்ளது. அவற்றில் பெரும்பாலான பகுதிகள் பயன்படுத்தப்படாமலுள்ளன. இந்தப் பிரதேசங்களில் தமிழ் மக்களை குடியமர்த்தும் வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுத்தால் தமிழர்கள் யாரும் இதற்கு முன்வர மாட்டார்கள். ஆனால், சிங்கள மக்கள் தொலை தூரத்திலிருந்தும் வந்து குடியேறத் தயாராகவே உள்ளனர். இதனை தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

வட மாகாணசபை மாங்குளத்தில் இயங்குவதே பொருத்தமானது என திட்டமிடப்பட்டது. ஆனால் அது யாழ்ப்பாணத்தில் கைதடியில் கட்டடங்கள் அமைக்கப்பட்டு இயங்குகின்றது. மாங்குளத்தில் குடிநீர் பிரச்சினை இருப்பதாகக் காரணம் கூறப்பட்டது. அவ்வாறாயின் கிளிநொச்சியிலாவது அதனை அமைத்திருக்கலாம். அதுவும் நடைபெறவில்லை. எல்லாம் தங்களுக்குள்ளேயே இருக்க வேண்டும் என்கின்ற சுயநல மனோபாவம் பொதுநலத்தைப் பின்தள்ளி விடுகின்றது.

இப்பொழுது ஒரு இலட்சம் காணிகளை இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கும் திட்டம் அரசாங்கத்தின் ஒரு முக்கிய வேலைத்திட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவும் வடக்கில் சிங்களக் குடியேற்றத்திற்கான மறைமுகமான நடவடிக்கை என்று கூறப்படுவதில் உண்மையில்லை என்று மறுப்பதற்கில்லை. ஆனால், இதனை தங்களுக்கு ஏற்றவாறு கையாளும் நடவடிக்கைகளை தமிழ் மக்கள் மேற்கொள்ள வேண்டும். எடுத்ததற்கெல்லாம் கோசம் எழுப்பும் தமிழ் அரசியல்வாதிகள் இதனை சரியான வகையில் கையாள வேண்டும். வெளியில் இறங்கி மக்களுக்கு தெளிவு படுத்தல்களை மேற்கொள்ள வேண்டும். ஆனால். இவ்வாறான நடவடிக்கைகளை தமிழ் அரசியல்வாதிகள் முன்னெடுப்ப தில்லை.


எவ்வாறாயினும் இறுதித் தருணத்திலேனும் கணிசமான தமிழ் இளைஞர்கள் இந்தத் திட்டத்திற்குத் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர். தாங்களாகவே முன்வந்து அவர்கள் இதனைச் செய்துள்ளனர். தற்போது நிலவும் கொரோனா தொற்று சூழ்நிலையில் விவசாயம், தோட்டச் செய்கை, சுயதொழில் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான சிந்தனை தமிழ் இளையோர் மத்தியில் ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதனை முறையாக நடைமுறைப்படுத்தினால் இளையோருக்கு மட்டுமல்ல. நாட்டிற்கும் புதிய திருப்பமாகவே அமையும்.

இன்னொரு விடயத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். புலம்பெயந்து வாழும் தமிழ் உறவுகள் தற்போதைய கொரோனா தாக்கத்தின் மத்தியிலும் தாயகத்திற்கான உதவிகளை மேற் கொண்டு வருகின்றமையினை காண முடிகின்றது. கனடா போன்ற நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புக்கள் தாயகத்தில் வாழும் மக்களின் பொருளாதாரத்தையும் கல்வியையும் மேம்படுத்தும் வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. தற்போது அறிவிக்கப்பட்டுள்ள இளையோருக்கான தொழில் முயற்சி தொடர்பாகவும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் ஆலோசனைகளையும் ஊக்குவிப்புகளையும் மேற்கொள்ளலாம். வேறு உள்நோக்கங்களில் சில வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் அதனை எமக்கு சாதகமானதாக மாற்றிக்கொள்வது எமது கைகளிலேயே உள்ளது.



# பிள்ளைகளின் உளவிருத்திக்கு பெற்றோர் தீங்கு செய்யலாமா?



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

நலம் என்பது வாழ்க்கையின் மிக முக்கிய கூறு. உடல் நலத்தைப் பாதுகாக்கவும், சமூகத்தில் திறமையுடன் செயற்படவும் இன்றியமையாத அடிப்படைக்கூறு உளநலமாகும். பெரும்பாலான பெற்றோர் பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதென்பது ஒரு சாதாரண விடயம் என நினைப்பது பொதுமையான கருத்து. உடல் நலத்துடன் பிள்ளைகளை வளர்த்தாலும் உள நலத்துடன் வளர்ப்பதென்பது மிக இலேசான விடயமல்ல. பிள்ளைகளின் வளர்ச்சிப் பருவங்கள் ஒவ்வொன்றினதும் கற்றல் நிகழ்வுகள் மிகப்பெரும் தாக்கத்தினை பிள்ளைகளின் உளத்தில் ஏற்படுத்துகின்றன. அதாவது கற்றலுக்கான அகப்புறத் தூண்டிகளின் செயற்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆரோக்கிய வாழ்வுக்கு உளநலம் முக்கியம். எனவே பிள்ளைகளின் உளவிருத்திக்குப் பெற்றோர் தீங்கு விளைவிக்கலாமா? இங்கு பெற்றோர் தம்மை அறியாமல் பிள்ளைகளுக்குத் தீங்கு செய்கின்றனர்.

குழந்தையின் கற்றல் நடத்தை மட்டுமன்றி உளவிருத்தியும் தாயின் கருவிலே ஆரம்பிக்கப்படுகிறது என்பது ஆய்வுகளின் முடிவாகும். இங்கு கிராமப் புறங்களில் வாழ்வோர் கருவுற்ற காலங்களில் தம்மில் கூடிய கவனம் செலுத்துவதில்லை. தாயின் ஆரோக்கிய வாழ்வு, பழக்க வழக்கங்கள், மனவெழுச்சி நிலைகள் என்பன குழந்தையின் உளத்திலும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. கருவை சுமக்கும்போது தாய்க்கு ஏற்படும் ஏக்கங்கள், தாக்கங்கள், வலிகள், இழப்புக்கள், இடர்கள், அபாய அறிவிப்புக்கள் என்பனவும் பிள்ளைகளின் உளவிருத்தியை பாதித்து பாடசாலைகளில் மெல்லக் கற்கக்கூடிய பிள்ளைகளைத் தோற்றுவித்துள்ளன.



பிள்ளைக்குப் பொருத்தமற்ற சூழல் வீட்டில் காணப்படக்கூடாது. பெற்றோர் குழந்தைகளுடன் பொழுதைக் கழிக்கும் போது அறிவுப் பசிக்கும் உணவளிப்போராகத் தொழிற்பட வேண்டும். இங்கு வேலைக்கு செல்லும் பெற்றோரில் பெரும்பாலானோர் தமது பெற்றோரிடமும், பராமரிப்பாளரிடமும் தமது பிள்ளைகளை விட்டுச்செல்வதால் குழந்தையின் உளவியல் தேவைகள் எவை என்பதை சரியாகப் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தாது விடுவதும் குழந்தையின் உளவிருத்தியில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. பிள்ளைகளுக்கு இடைஞ்சல்கள், தவறுகள் என்பன பெற்றோருக்குத் தெரியாவண்ணம் உறவினர்கள், அயலவர்களால் இழைக்கப்படுவதும் பிள்ளைகளின் உளநலத்தைப் பாதிக்கின்றது. பிள்ளைகளுக்கு தேவையானவற்றை தேவையான வேளையில் தேவையான அளவில் பெற்றோர் வழங்குவதைத் தவிர்த்துக் கொள்வதும் பிள்ளையின் உளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தத் தவறுவதில்லை.

குழந்தைகளின் வாழ்வில் மிக முக்கியமான பங்கு வகிப்பது பெற்றோர். பெற்றோரின் சிறிய பிழைகள் நீண்டகாலத் தாக்கங்களைப் பிள்ளைகளுக்கு ஏற்படுத்துகின்றன. குழந்தை பெற்றோர் சொல்வதை கேட்பதில்லை என்றால் அதன் அர்த்தம் குழந்தைக்கு எப்படிச் சொல்வதென்பது பெற்றோருக்குச் சரியாகத் தெரியவில்லை என்பதாகும். குழந்தையிடம் எப்படிப் பேசவேண்டும் என்பதைவிட எப்படி பேசக்கூடாது என்பதைத்தான் முதலில் பெற்றோர் தெரிந்திருக்க வேண்டும் என்பது குழந்தைகள் தொடர்பான நிபுணர்களின் கருத்தாகும். நிபுணர்கள் கருத்து இங்கு பெரும்பாலானோரால் பின்பற்றப்படுவதில்லை. குழந்தைகள் சீர்திருத்தப்பட வேண்டிய சிறிய மனிதர்கள். வாழ்வியல் சவால்கள் மிகுந்த நமது சமூகச் சூழலில் நாம் குழந்தைகளை எவ்வாறு அணுகுகின்றோம் என்ற சுய பரிசோதனை மிகவும் அவசியமாகி விட்டது. குழந்தைகளின் அகவுலகைப் பற்றிய புதிய புரிதல்கள் நமக்குத் தேவை.

ஒரு குடும்பத்தில் இரண்டாவது குழந்தை பிறந்ததும் இக்குழந்தையைக் கவனிக்கும் விடயத்தில் காட்டும் அக்கறையை முதல் குழந்தைக்குப் பெற்றோர் வீட்டில் காட்டுவதில்லை. இதனைக் கவனிக்கும் முதல் குழந்தை இதுவரை எனக்கு கிடைத்து வந்த கவனிப்பை பறித்துக் கொண்டது புதிதாக வந்த குழந்தைதானே என நினைத்து அக்குழந்தை மீது வெறுப்பையும், பொறாமையையும், பகைமையையும் வளர்த்துக் கொள்கிறது. முதல் குழந்தைக்குத் தோன்றும் இம்மன நிலையை உடன் பிறந்தோரிடம் நிலவும் பகைமை என உளவியல் கூறுகிறது. 2 வயது முதல் 4 வயது வரையான காலத்தில் இப்பிரச்சினை அதிகரிக்கிறது. பெற்றோர் இரு குழந்தைகளையும் நடத்துகின்ற விதமே அதற்குக் காரணம்.

இரண்டு குழந்தைகளையும் சமமாக நடத்துவது குறைவு. இதன்மூலம் மொழி வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, அன்பு, பாசம், நகைச்சுவை உணர்வு என்பன பாதிக்கப்படுகின்றன.

குழந்தைகள் பெற்றோரிடமிருந்து போதிக்கப்படுவதைவிட அதிகமாக நடப்பவற்றைக் கவனித்தே நடந்து கொள்கின்றனர். குழந்தைகளிடம் பெற்றோர் உண்மை பேச வேண்டும் பொய் சொல்லக்கற்றுக் கொடுக்கக் கூடாது. ஆனால் சில சந்தர்ப்பங்களில் பொய்யும் பேசுகின்றனர். குழந்தைகள் சிறு, சிறு தவறுகள் செய்யும்போது கடுமையான தண்டனைக்கு உட்படுத்துகின்றனர். அதிக தடைகளையும் போடுகின்றனர். பிள்ளை ஏதும் குழப்பம், குழப்படி செய்தால் அவை தொடர்பாகத் திரும்பத் திரும்பக் கேள்விகளைக் கேட்டு அதட்டுவது, ஓர் இடத்தில் இருத்தி யாருடனும் கதைக்கக் கூடாது எனக் கூறுவது பிள்ளையின் உளநலத்தைப் பாதிக்கின்றது. பிள்ளைகள் எந்த வழியில் பாதிக்கப்பட்டாலும் ஒட்டு மொத்த சமூகமே நாளை இருட்டுக்குள் தள்ளப்படும். பிள்ளைப் பருவத்தில் ஏற்படும் உளத்தாக்கங்களால் பிள்ளையின் இளமை வளம் சட்ட விரோத சமூக எதிர் செயற்பாடுகளில் கழிந்து போகின்றன. அதற்குப் பெற்றோரே துணை போகின்றனர்.

சிலர் பிள்ளைகளுக்காக நேரத்தை ஒதுக்காமை, பிள்ளைகளின் நடத்தை மாற்றங்களில் அதீத அக்கறை காட்டாமை, குடும்ப வாழ்வியல் நெறி முறைமை தடம் புரண்டு காணப்படுவதால் பிள்ளைகள் பாதிக்கப்படுகின்றனர். வாழ்க்கையின் ஆரம்பப் புள்ளியாக இருப்பது சிறுபராயம் தான். அந்தப் பராயத்தில் இவ்வாறான இன்னல்களுக்குப் பிள்ளை உட்படுவதால் சேதாரம் மிக்க வாழ்வே அவர்களுக்குப் பரிசாகக் கிடைக்கின்றது. பாவம் இது பிள்ளைக்குத் தேவைதானா? குழந்தைகள் எப்போதும் பெற்றோரின் மனநிலைக்கு வர வேண்டும் என நினைத்து சிலர் செயற்படுகின்றனர். சிலர் எப்போதும் படிப்பைப் பற்றியே கதைத்துக் கொண்டிருப்பர். பிள்ளை விளையாடுவதற்கான சந்தர்ப்பங்கள் பெற்றோரால் தவிர்க்கப்படுகின்றன. பிள்ளை தவறு செய்தால் அந்தத் தவறை நிவர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவது குறைவு. சில பெற்றோரின் அதிரடி அணுகுமுறைகளும், பிள்ளையை இன்னொரு பிள்ளையுடன் ஒப்பிட்டுப் பேசும் பழக்கமும் தாராளமாகக் காணப்படுவதும், சோம்பேறியாக இருக்கிறாய் எனக் குறைகூறுவதும் பிள்ளையின் உளத்தில் பாதிப்பை தோற்றுவிக்கின்றன.

பிள்ளைகளுக்கான ஆலோசனைகளோ, அறிவுரைகளோ, புத்திமதிகளோ அவர் சார்ந்ததாகவும், அவர் சுபாவம் சார்ந்ததாகவும் இருப்பது குறைவு. பொறுமையுடனும், பொறுப்புடனும் பிள்ளையின் விடயங்களில் தொழிற்படும் பெற்றோர் குறைவு. "செயற்படுத்தி முடிக்கும்வரை சில விடயங்கள் எப்பொழுதும் சாத்தியமற்ற ஒன்றாகவே காட்சி தருவதுண்டு" என நெல்சன் மண்டேலா கூறியுள்ளார். எனினும், எமது பெற்றோர் பிள்ளையின் விடயத்தில் அவசரப்பட்டு முடிவுகளை மேற்கொள்ளுகின்றனர்.

பெற்றோரிடம் அடி வாங்கும் பிள்ளைகள் உளவியல் ரீதியில், உணர்வு ரீதியில்

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC
• கழுத்து, • முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தம்
போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்

Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.
WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:
• STRESS • SKIN PROBLEM • RESPIRATORY PROBLEMS • DIGESTIVE PROBLEMS • VARICOSE VEINS • BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM • TREAT WITH MASSAGE THERAP • ALLERGIES • SEXUAL PROBLEMS • SEXUAL PROBLEMS • CHOLESTEROL • TUMOR • FOOT PROBLEM
HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING
Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis
Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss
Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids
Stomatitis, Colitis
Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER
TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# கதாசிரியர்




உங்களுக்கு கதை எழுத பிடிக்குமா? உங்கள் பதில் இல்லை என்பதாக இருந்தாலும் நீங்கள் ஒரு பிறவிக் கதாசிரியர் என்பது உங்களுக்கு தெரியுமா?

என்ன வியக்கிறீர்கள். சற்றே உங்கள் இளவயதிற்குப் பின்னோக்கிப் போய் பாருங்கள். என்றாவது ஒரு நாள் உங்கள் நண்பர்கள் எல்லோரும் சுற்றுலா சென்ற போது உங்களால் மட்டும் போக முடியாத சூழல் ஏற்பட்டதா? அப்போது உங்கள் மனம் என்ன செய்தது என்று யோசித்துப் பாருங்கள். நிச்சயம் அவர்கள் சென்ற சுற்றுலாவையே சுற்றிக் கதை வடித்திருக்கும். அதாவது வெளியே போன அத்தனை நண்பர்களும் மிக சந்தோஷமாக குதூகலமாக இருப்பதாகவும், நன்றாக அரட்டை அடித்து மகிழ்வதாகவும் ஓர் உல்லாசமான கதை உங்கள் மனதில் பல காட்சிகளாக விரிந்திருக்கும்.

அதேநேரம் வெளியே போக முடியாத உங்கள் சூழலைப் பற்றி ஒரு சோகமான கதையை எழுதி இருக்கும். சுற்றுலா சென்ற நண்பர்கள் எல்லோரும் மிகவும் கொடுத்து வைத்தவர்கள் என்பதாகவும், உங்களுக்கு மட்டும் எப்போதுமே எதுவும் இலகுவாக இல்லை என்பதாகவும் அந்தக் கதை உங்கள் மனதை அழுத்தி இருக்கும். இது ஆழ்மனதின் இயல்பு.

உச்சி வெயில் சுட்டெரிக்கும் மெக்ஸிகோவின் நண்பகல் நேரம். பட்டாம்பூச்சியாய் அந்த வீதியில் தினம் பறந்து திரியும் அந்த இளம் பெண் சாலையின் ஓரத்தில் சரிந்து மயங்கிக் கிடக்கிறாள். சர்ர்; சர்ர்; என அவளைத் தாண்டிச் செல்லும் வாகனங்களின் இரைச்சல்களை உணர முடியாதவளாய் எந்த சலனமும் இல்லாமல் பேச்சு மூச்சின்றி அப்படியே கிடக்கிறாள். அந்த சாலையைக் கடக்கும் பாதசாரிகள் கண்களில் சற்று நேரம் கழித்தே அவள் மயங்கிக் கிடக்கிறாள் என்பது பட அவளை சுற்றிலும் கூட்டம் கூடுகிறது. ஒருவர் தண்ணீரை எடுத்து அவள் முகத்தில் தெளிக்க மற்றொருவர் அம்புலன்ஸை அழைக்கிறார். அவள் யாரென அடையாளப்படுத்தப்பட்டு அவளது பெற்றோருக்கும் தகவல் தெரிவிக்கப்படுகிறது.

இதோ.. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவர்கள் அவள் உடல் நிலையைப் பரிசோதிக்கும் நேரத்துக்குள், இந்தப் பிரச்சினைக்குக் காரணமான அந்தப் பெண்ணின் மனநிலையை சற்றுப் பார்த்து விடுவோம்.



அந்த சிறு பெண்ணுக்கு எப்போதுமே மனதிற்குள் ஓர் ஆதங்கம். தன்னுடைய நண்பர்கள் எல்லாம் நினைத்தது போல ஃப்ரியாக மகிழ்ச்சியாக இருக்கும்போது தனது பெற்றோர் மட்டும் ஏன் தன்னிடம் மிகக் கட்டுப்பாடாக இருக்கின்றனர். என்ன செய்தாலும் ஏதாவது குறை கூறிக் கொண்டே இருக்கின்றனரே, இவர்களுக்கு என் மேல் கொஞ்சம் கூடப் பிரியமே இல்லையா என்று நினைத்து வருந்துகிறாள். தன்னை அவர்கள் ஒவ்வொரு முறை அழைக்கும்போதும் தான் ஏதோ தவறு செய்து விட்டோமோ என்றே அவள் மனம் பதைபதைக்கிறது. இப்போது என்ன குறை கூறப் போகின்றனர் என்று தெரியவில்லையே என்று மனதிற்குள் இனம் புரியாத பதற்றமாகவே இருக்கிறது.

நான் இவர்களின் உண்மையான பெண் தானே அல்லது ஏதாவது ஒரு விபத்தாய் இவர்களிடம் வந்து சேர்க்கப்பட்டிருப்பேனோ என்பதாக அந்தச் சிறு பெண்ணின் மனம் தன்னைப் பற்றி என்னென்னவோ மர்மக் கதை எழுதுகிறது. முடிச்சுகள் அவிழ்க்கப் படாமல் அந்த மர்மக் கதை இன்னும் இன்னும் ஆதாரங்களை தன்னை சுற்றி நடப்பவற்றிலிருந்து சேர்த்துக் கொண்டே வருகிறது.

எப்போது பார்த்தாலும் பாடங்களை படித்தாயா, அதை செய்தாயா இதை செய்தாயா என்றே விரட்டிக் கொண்டே இருக்கின்றனர். அவர்களுடைய கனவுக்கு நான் ஒரு கருவியாக இருக்க வேண்டும் என்பது மட்டுமே அவர்களுடைய எண்ணம் என்றே அந்தப் பெண்ணுக்குப் படுகிறது. இப்படியே நினைக்க ஆரம்பித்து, இனி வாழ்வதில் எந்த அர்த்தமும் இல்லை எனத் தோன்ற தன் உயிரை மாய்த்துக் கொள்ள முடிவு செய்கிறாள். ஆனால் அதற்கும் தைரியம் இல்லாமல் உடலும் மனமும் பலயீனமாகி மயங்கி சாலையில் விழுந்த அந்தப் பெண்ணைத்தான் இங்கே மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சையளிக்கின்றனர்.

தீவிர சிகிச்சைக்குப் பின் மயக்கமும் விழிப்புமாக இருந்த அந்தப் பெண்ணின் காதுகளில் அவளது தந்தை அருகில் இருப்பவர்களிடம் பேசிக் கொண்டிருப்பது கேட்கிறது. வார்த்தைகளின் அர்த்தம் விளங்கும் முன் குரலின் அழுகை அவளைத் தாக்குகிறது. தழுதழுத்த குரலில், ‘இவள் என்றால் எனக்கு உயிர். என்னேரமும் துறுதுறுவென இருப்பாளே, இப்படி சக்கையாகக் கிடக்கிறாளே’ என்று தாங்க முடியாத சோகத்துடன் விம்மி அழும் தந்தையின் குரல் கேட்டு அதிர்ந்து போகிறாள்.

தான் காண்பது கனவா அல்லது தன் ஏக்கத்தின் வெளிப்பாடாக வந்த கற்பனையா என நம்ப முடியாமல் தவிக்கிறாள். அப்போது தொடர்ந்து மிருதுவாகத் தன் கைகளை வருடிக் கொடுத்துக் கொண்டிருக்கும் அம்மாவின் அழுகுரலும், நண்பர் ஒருவர் அவர்கள் இருவரையும் தேற்றுவதும் தெளிவாகக் கேட்க, மெல்லக் கண்களைத் திறந்து அவர்களைப் பார்க்கிறாள். அவள் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வடிகிறது.

அது ஆனந்தக் கண்ணீர், என்பதை அறியாத அந்தத் தந்தை ஓடோடி அவளருகில் வந்து ஆறுதலாக தலையைக் கோதிவிட்டு, அருகில் இருக்கும் மாதுளம் ஜூஸை எடுத்துக் கொடுத்து இது உனக்கு பிடிக்குமே.. கொஞ்சம் அருந்துகிறாயா என்று கேட்க அவர் கைகளைப் பிடித்துக்கொண்டு அவள் கதறி அழுகிறாள்.

எனக்கு மாதுளம் ஜூஸ் பிடிக்கும் என்று என் தந்தைக்கு தெரியுமா? எப்போது தெரிந்தது? எப்படி தெரிந்தது. இவர்கள் என் சிறு விருப்பு வெறுப்புக்கூட அறியாதோர் என்றல்லவா தவறாக நினைத்திருந்தேன். இவர்களுக்கு உண்மையில் என் மீது இத்தனை பாசமா?

யோசித்த அந்த நிமிடம் அந்த பெண்ணுக்கு, தனது பெற்றோரைப் பற்றி தனது மனம் இது நாள்வரை உண்மையல்லாத ஒரு கதையை, ஏதோ ஒரு புள்ளியைப் பிடித்துக்கொண்டு தன் போக்கில் எழுதிக் கொண்டு இருந்திருக்கிறது என்பது புலப்படுகிறது.

எதிர்மறையான சிந்தனைகளுக்கான புள்ளி அழிந்து மனம் இப்போது நேர்மறையாக சிந்திக்கத் தொடங்குகிறது. இப்போது அவர்களின் கண்டிப்பு எல்லாம் தன் மேல் அவர்களுக்கு உள்ள அக்கறையாகத் தெரிகிறது. அவர்கள் எத்தனை பிரியமானோர், தனக்காக அவர்கள் எத்தனை தியாகம் செய்திருக்கின்றனர். தனது எதிர்காலம் நன்றாக இருக்க வேண்டும் என்று தங்களை கடினப்படுத்திக் கொண்டு கண்டிப்புடன் நடந்திருக்கின்றனர் என்பதெல்லாம் புரிகிறது. இது அந்தப் பெண்ணின் எண்ணத்தை மட்டும் மாற்றவில்லை, அவளது வாழ்க்கையையே அழகான முறையில் புரட்டிப் போடுகிறது. இன்று அந்த பெண் மெக்ஸிகோவின் தலைசிறந்த உளவியல் ஆலோசகர். என் நெருங்கிய சினேகிதி.

அன்று அந்த இளம் பெண்ணுக்கு நிகழ்ந்தது போல் தன் சுற்றத்தை புரிந்து கொள்ளும் சந்தர்ப்பங்கள் எல்லோருக்கும் அமைவது சாத்தியமில்லை. ஆனால் உங்களிடம் ஒரு விழிப்புணர்ச்சி இருந்தால், யாரையும், இவர்கள் இப்படித்தான் என்று முடிவு பண்ணாமல், அவர்களுடைய நிலையில் இருந்து புரிந்துகொள்ள முயற்சிப்பீர்கள். அந்தப் புரிதல் தன்னை சுற்றி இருப்போர் மேல் மட்டுமல்ல தன் மேலும் நம்பிக்கையை ஏற்படுத்தும்.

# அய்யய்யோ கொரோனா!

ஆபத்தான கொரோனா
எங்கிருந்து வந்தாயோ நீ
எல்லோரையும் பயமுறுத்த
உன்னோட வருகையாலே
உலகமே பயந்து போச்சு
உலகத்தை உலுக்கி நீயும்
வேடிக்கை பார்க்கிறியே

கைகொடுக்கும் பழக்கத்தையும்
கட்டுப்பாட்டில் கொண்டுவந்தே
கட்டியணைத்திடவே
தயங்கியே நிக்கிறாரே
நீ வருவதும் தெரிவதில்லை
போவதும் தெரிவதில்லை
உன்னோட வருகையாலே
உயிர் சேதமாயிடிச்சே

உன்னைய கொல்வதற்கு
ஒரு மருந்தும் இல்லையோ
இதுபோல கொடிய நோயும்
இதுவரைக்கும் வந்ததில்லை
வீட்டை விட்டு வெளியேற
வேதனையா இருக்குதே



வேகமாக சுழன்ற நகரம்
வெறிச்சோடி போச்சுதே

பத்திரமா நாமிருந்தா
பயப்பட தேவையில்லே
கட்டுப்பாட்டில் நாமிருந்தா
கண்டிப்பாக குறைச்சிடலாம்
வீட்டோட நாமிருந்து
கொரோனாவை தடுத்திடுவோம்
கூட்டமாக கூடாமல்
விரட்டயே அடிச்சிடுவோம்

அய்யய்யோ கொரோனா
ஆபத்தான கொரோனா

வீ.கோவிந்தராசன்

விளம்பரம்
VLAMBARAM
30 ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

‘விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்’ நிறுவனத்தால் வெளியிடப்படும் ‘விளம்பரம்’ பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# கேரளா பெண்களின் பத்து அழகு ரகசியங்கள்!

கண்ணன்

## அழகு குறிப்பு

கோலிக்குண்டு கண்கள், பொலிவான சருமம், புஷ்டியான கன்னம், நீண்ட கருங்கூந்தல்.. கேரளத்துப் பெண்கள் என்றாலே இவைதான் நம் நினைவுக்கு வரும். ஒவ்வொரு பெண்களும் ஒவ்வொரு விதத்தில் அழகு என்றால், மலையாளப் பெண்களின் அழகு தனி. அசின், நயன்தாரா, பாவானா, அமலாபோல், லட்சுமிமேனன், நஸ்ரியா, கீர்த்தி சுரேஷ் போன்ற மலையாள வரவுகள் தமிழ் திரையுலகில் பெரிய வரவேற்பைப் பெற்று வெற்றி நட்சத்திரங்களாக வலம் வருவது நமக்குத் தெரியும். சரி, எப்படி இத்தகைய அழகைப் பெற்று பராமரிக்கின்றனர் என்று வெளிநாட்டு அழகுக்கலை நிபுணர்கள் ஒருமுறை கேரளாவுக்கு வந்து பார்த்தபோது, வீட்டிலேயே எளிமையாகவும், சாதாரணமாகவும் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு தங்களின் அழகை மெருகேற்றிக் கொள்வதைப் பார்த்து வியந்துப் போனார்கள்.

கேரளப் பெண்களின் அழகு பராமரிப்பு மற்ற நாட்டுப் பெண்களின் அழகு பராமரிப்பை விட மாறுபட்டது. அதற்கு



இரு காரணங்கள் உண்டு. ஒன்று, சிறு குழந்தை முதல் இயற்கையில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டே அழகைப் பராமரிப்பது. மற்றொன்று, இரசாயன அழகு சாதனப் பொருட்களைப் பயன்படுத்துவதை தவிர்ப்பது. வட இந்தியப் பெண்களே பொறாமை கொள்ளும் கேரள பெண்களின் அழகுக்குப் பின்னால் சில இரகசியங்கள் ஒளிந்திருக்கின்றன. இனி அவற்றை பார்ப்போம்.

**1. இளநீர் பேஷியல்:** கேரளப் பெண்களின் அழகு பாரம்பரியத்தில் தேங்காய் சார் பொருட்கள் முக்கியபங்கு வகிக்கிறது. கேரளாவில் தேங்காய் செழிப்பு அதிகம். ஒவ்வொரு வீட்டிலும் தென்னை தோப்பு இருக்கும் அல்லது ஒன்றிரண்டு தென்னை மரங்களாவது இருக்கும். இளநீர், வழுக்கை, தேங்காய் பால், தேங்காய் தண்ணீர், தேங்காய் எண்ணெய் என அனைத்தையும் தங்கள் சரும பாதுகாப்புக்குப் பயன்படுத்திக் கொள்கின்றனர். குறிப்பாக குழந்தை பிறந்த இரு மாதங்களுக்குப் பிறகு இளநீரை வடிகட்டி குழந்தையின் முகம், கழுத்து, கைகள், முட்டிக்குக் கீழ் பகுதிகளில் பூசி விடுவார்களாம். இப்படி பூசுவதனால் பின்னாளில் வெயிலில் அலைந்தாலும் சரும நிறம் கறுப்பாவதைத் தடுக்கும். ஐந்து வயதைக் கடந்ததும் வழுக்கை தேங்காயை அரைத்து, அதோடு இளநீர் கலந்து முகத்தில் பூசி, காய்ந்ததும் அலம்புவார்கள். இதனால்தான் கேரளப் பெண்களின் கன்னங்கள் புஷ்டியாக கொழுகொழுவென்று மிளிர்கிறது.

**2. தேங்காய் எண்ணெய்:** கேரளத்துப் பெண்கள் தினமும் தங்கள் தலைக்கு சுத்தமான தேங்காய் எண்ணெயை மட்டுமே பயன்படுத்துவர். வாசனை தரும் எண்ணெய் போன்ற இரசாயனங்கள் கலந்த தேங்காய் எண்ணையை பெரும்பாலும் பயன்படுத்துவதில்லை. தேங்காய் எண்ணெயை இளஞ்சூட்டில் தலையில் தடவி விரல்களால், 15 நிமிடம் மசாஜ் செய்வர். இது கூந்தல் வளர்ச்சியைத் தூண்டி, பட்டுப்போன்று மிருதுவாக்குகிறது. இதனால்தான் கேரள பெண்களின் கூந்தல் நீளமாகவும் கருமையாகவும் இருக்கின்றது. அன்றாட சமையலுக்கும் தேங்காய் எண்ணெய் உபயோகிப்பதே அவர்களின் அழகின் இரகசியமாகவும் உள்ளது.

**3. தேங்காய் பால்:** கேரளா பெண்களின் நீண்ட அடர்த்தியான கருங்கூந்தலுக்கு தேங்காய் பால் முக்கியக் காரணம். தேங்காய் பாலைத் தலையில் நன்கு தேய்த்து, இரண்டு மணி நேரம் ஊறியபின் வெறும் தலையில் முடியை அலசுவர். தேங்காய் பாலில் உள்ள இயற்கையான எண்ணெய் தலையில் தங்கி விடுகிறது. இதனால் தலைமுடி சுத்தமாவதுடன் பட்டுப்போல் பளபளக்கும். கேரளாவில் பெரும்பாலான சுற்றுலா இடங்களில் ஷாம்பு விற்க, பயன்படுத்த தடை இருப்பதால் கேரளாவில் ஷாம்பு பயன்பாடு குறைவு. அதனால் ஷாம்புவிற்குப் பதிலாக தேங்காய் பால் போல் சீகைக்காயையும் அதிகம் பயன்படுத்துவர்.

**4. மஞ்சள்:** மஞ்சள் தேய்த்து குளிப்பது வழக்கமான பராமரிப்புதான் என்றாலும், இன்று பல இடங்களில் மஞ்சள் பூசிக் குளிக்கும் பழக்கம் வெகுவாகக் குறைந்துவிட்டது. அதற்குப் பதிலாக மஞ்சள் சேர்க்கப்பட்ட அழகு கிரீம்களை பெருமளவில் பயன்படுத்துகின்றனர். ஆனால் கேரளப் பெண்கள் இன்றளவிலும் மஞ்சள் தூள் பூசிக் குளிப்பதையே வழக்கமாகக் கொண்டிருக்கின்றர். இவை சருமத்தில் உள்ள செல்களுக்குப் போதிய ஊட்டச்சத்துக்களை அளித்து, சருமம் ஆரோக்கியத்துடன் இருக்க உதவுகிறது. இதனால்தான் தோல் சம்பந்தப்பட்ட நோய்கள் இல்லாமல், அவர்களின் முகம் எப்போதும் இளமையாகவும் ஆரோக்கியமாகவும் உள்ளது.

**5. சிவப்பு சந்தனம்:** கேரளப் பெண்களின் மற்றொரு பிரதான பேஷியல், சிவப்பு சந்தனம். தினமும் இரவு தூங்கச் செல்வதற்கு முன் சிவப்பு சந்தனப்பொடியை தண்ணீர் சேர்த்து பேஸ்ட் போல் செய்து, முகத்தில் தடவி அரை மணிநேரம்



ஊற வைத்து கழுவுவர். சிவப்பு சந்தனம் சருமத்தில் உள்ள அழுக்குகள், இறந்த செல்களை வெளியேற்றி, புதிய செல்களை உருவாக்குகிறது. இதனால்தான் கேரளப் பெண்களின் முகம் பருக்கள், தழும்புகள், கரும்புள்ளி இல்லாமல் பொலிவாக இருக்கிறது.

**6. ஆயுர்வேத மசாஜ்:** அழகு பராமரிப்பை முகத்தில் மட்டுமில்லாது, உடல் முழுவதும் பேணுவதிலும் ஆர்வம் கொண்டவர்கள் மலையாளப் பெண்கள். கேரளா ஆயுர்வேத மசாஜ் உலகளவில் பேர்பெற்றது. இளம் சூடான மூலிகை எண்ணெயை உடல் முழுவதும் தடவி மெதுவாக பிடித்துவிடுவர். பின்பு பல்வேறு மூலிகை கலந்த கலவையை துணியில் கட்டி, அதை பொட்டலமாக்கி, உடலில் ஒத்தடம் எடுப்பர். இதன்மூலம் உடலில் இரத்த ஓட்டம் மேம்பட்டு, தசைகளில் மினுமினுப்பை ஏற்படுத்தும். மேலும் நரம்பு மண்டலம் சுறுசுறுப்பாக இயங்க வைப்பதுடன், நரம்பு சம்பந்தப்பட்ட நோய்களும் குணமாகின்றன. இவை எல்லாம் சாதாரண ஆயுர்வேத மசாஜ் முறைகள்தான். இவற்றை வீட்டிலேயே செய்து கொள்கின்றனர். அப்யங்க ஸ்வேதனா, சினேகாப்னா, கர்ணபூர்ணா என்று பலவிதமான ஆயுர்வேத மசாஜ் முறைகள் உள்ளன. இவற்றை மசாஜ் கிளப்புகளுக்கு சென்று எடுத்துக் கொள்கின்றனர்.

**7. உணவு முறைகள்:** கேரளாவின் உணவு முறை என்று சொல்வதைவிட, உணவுக்

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்...)

## தூயதமிழ் பரப்பிடுவோர் பெருக வேண்டும்

தாயகத்தில் தனித்தமிழை வளர்த்தவென் முன்னோர்
தந்திட்ட ஆசிகளும் தொடர்ந்தருள் கூட்டத்
தூயதமிழ் வளர்த்துவந்தோர் தோன்றல் நானும்
சொந்தத்திற் செந்தமிழைப் பேணி வந்தேன்!
தேயாத நல்லாக்கம் தமிழிற் செய்யும்
திறன்மிக்கோர் நட்பினையும் சிட்னியிற் பெற்றேன்!
ஓயாது பிறமொழியின் கலப்பால் தமிழை
உருக்குலைப்போர் செயல்கண்டு உள்ளம் நொந்தேன்!.

மெல்பேர்ணில் வசிக்குமென்றன் இனிய நண்பன்
மின்னஞ்ச லோடிணைப்பு ஒன்றை அனுப்பி
நல்லதொரு கதையிதடா மறவாது நீயும்
நன்றாக வாசிப்பாய்! பின்னர் எனக்குத்
தொல்லையெனக் கருதாது கதையிற் கண்டு
சுவைத்ததெல்லாம் எழுதிடுவாய்! புலம்பெயர் நாட்டில்
சொல்லிஎண்ணக் கூடியதோர் கதைஎழுத் தாளருள்
சோடிச்சு எழுதுவதில் "விண்ணி" என்றார்.

வரதராசன் போன்றபலர் வண்ணத் தமிழில்
வடித்தளித்த கதைகளைநான் விழித்தே இருந்து
இரவிரவாய்ப் படித்தநாளை நினைப்ப துண்டு!
இன்றுமந்தப் பசுமையான எண்ண அலைகள்
விரவிநின்றென் சிந்தனைக்கு விருந்தா யமையும்
வேண்டுமட்டும் கொச்சைத்தமிழ் எழுதி விற்போர்
பரவுவதைப் பார்க்கின்றேன் இன்றவர் படைப்பைப்
பார்த்ததுமே அதிர்ச்சிகொள்வேன்! பதைத்து நிற்பேன்!!

நண்பனவன் விருப்புடனே அனுப்பி வைத்த
நங்கையவள் கதையைநான் படிக்க லானேன்
"கண்படவே" கூடாது கதையில் அந்தோ
கண்டபல ஆங்கிலச்சொற் கலப்பை நானும்
எண்ணவெண்ண என்உள்ளம் நொந்த தம்மா!
ஏனிந்தப் புலம்பெயர்ந்த எழுத்தா ளர்பலர்
தண்டமிழைத் தரணியிலே சாக டித்துத்
தம்வயிற்றை நிரப்பிடவோ முனைந்து விட்டார்?

"ஆங்கிலத்தைக் கலந்துகதை எழுதா விட்டால்
ஆரையா என்கதையைப் படிப்பார்" என்றும்
போங்களையா தனித்தமிழில் எழுதும் கதைக்குப்
பொன்னான "மவுசு" ஒன்றும் இருக்கா தென்றும்
தாங்கமாட்டேன் ஆங்கிலக்கலப் பில்லாக் கதையை
தனதுபுகழ் பாடுவோர்கள் படிக்கார் என்றும்
அங்கலாய்க்கும் "எழுத்தாளி" நினைப்பார் போலும்!
அவர்கதைக்கு நீர்க்குமிழி ஆயுள் தானே!

சிறுகதையைச் சீர்தூக்கிப் பார்த்த போது
செந்தமிழுக் கேற்பட்ட அவலங் கண்டேன்!
அறுபதுக்கும் அதிகமான ஆங்கிலச் சொற்கள்
அத்தோடு ஐயாறு இலக்கணப் பிழைகள்
உறுதியொடு எழுத்தாளர் ஆங்கிலக் கலப்பை


ஊக்குவித்துத் தமிழ்எழுதி வருவா ராகில்
இறுதியாகத் தமிழ்தன்னை அழிக்கும் பணியில்
இவைக்குமொரு பங்குண்டு கவிச்சொல் ஏற்பீர்!
ஒருபானை சோற்றிற்கு ஒன்றுபோது மென்ற
உதாரணமாய் இக்கதையைக் காட்டி நின்றேன்
பெருமளவிற் கலப்புத்தமிழ் எழுதும் அன்பர்
பெரும்மனது வைத்தினிமேல் தமிழைத் தமிழாய்
அருந்தாய்க்குச் செய்திடுமோர் கடமையென் றுணர்ந்து
திருநெறிய தேன்தமிழுக்(கு) உயிர்ப் பிச்சை
திருந்தியென்றும் அளித்திடுவீர் வருந்திக் கேட்பேன்.

பள்ளிகளில் நல்லதமிழ் படிப்பிக் கின்றார்
படிக்கின்ற பிள்ளைகளின் தொகைதான் குறைவே!
கள்ளமில்லாக் குழந்தைகளும் கலப்புத் தமிழைக்
கற்றிடாது பார்ப்பதெங்கள் பெற்றோர் கடனே!
எள்ளிநகை யாடிடாதீர் தாய்மொழித் தமிழில்
இயல்பாகச் சிந்தித்துச் செயலாற்றி வந்தால்
புள்ளிவிபரம் சொல்கிறதே பெறுபே றதனில்
போதுமென்ற உயர்வுவரும் சிந்திப் பீரே!


ஆய்வுசெய்த நிறுவனத்தின் கூற்றைக் கேட்பீர்!
அடுத்துவரும் நூறாண்டின் பின்னர் எடுக்கும்
ஆய்வினிலே தமிழ்என்ற பெயர்இருக் காதாம்!
ஆச்சரியப் படுவதற்கு ஏது உளதோ?
தாய்நாட்டில் தமிழ்க்கொலையை நன்றே செய்யும்
சஞ்சிகைகள் ஊடகங்கள் சொல்லி லடங்கா!
பேய்போலக் கொடுந்தமிழை வளர்க்கப் போட்டி
பெரிதாகப் போடுதையா திரைப்ப டங்கள்!

இன்றமிழுக் கொருசொந்த நாடும் இல்லை!
இந்நிலையில் விமோசனந்தான் எங்கே தோன்றும்?
பொன்னிலங்கைத் தமிழர்நிலம் பறிபோ குதையா!
பொதிகையிலே பிறந்திருந்தும் தமிழ்த்தாய் நாட்டில்
கன்னித்தமிழ்த் தரமங்கு விலைபோகு தையா!
காட்டுத்தீ யாயாங்கிலக் கலப்பைக் காண்பீர்!
தொன்மைமொழி அழிந்திடாது நிலைக்க வேண்டில்
தூயதமிழ் பரப்பிடுவோர் பெருக வேண்டும்.!

ஒருவரையும் புண்படுத்தும் நோக்கம் இல்லை!
ஒண்டமிழைச் சிதைக்காது உயர்தாய் மொழிக்கு
பெருமைதரும் தனித்துவத்தைப் பேணிக் காக்கப்
பேதைநான் தயவாக விடுக்குஞ் செய்தி
திருந்துதற்கு ஒன்றேதான் வழியுண் டென்றால்
திண்மைமிகு புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்
ஒருங்கிணைந்து மனம்வைத்துத் தூய தமிழில்
ஒவ்வாத மொழிக்கலப்பை நிறுத்தல் வேண்டும்.!



இளமுருகனார் பாரதி
பல்வைத்திய கலாநிதி


TRIDEL
BUILT FOR LIFE
WESTERLY
NEW PROJECT BY TRIDEL
(DUNDAS/ISLINGTON)
Storeys 20
Units 257
Sizes from 502SF to 1120SF
Walk to Islington subway
Get VIP Platinum Access to the Best Units and the Best Pricing
416.321.6969
HomeLife / GTA Realty Inc. Brokerage*
HOMELIFE
HIGHER STANDARDS
5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2
*Independently Owned & Operated

# திரை விமர்சனம் - சூரரைப் போற்று

## கண்ணன்

இந்தியாவில் குறைந்த விலையில் நடுத்தர வர்க்கத்தினருக்கும் விமானப் பயணங் களைச் சாத்தியமாக்கிய ‘ஏர் டெக்கான்’ நிறுவனர் கேப்டன் ஜி.ஆர். கோபிநாத்தின் வாழ்க்கைக் கதையைத் தழுவி உருவாக்கப்பட்ட படம், இது.



எளியோருக்கும் விமானப் பயணத்தை சாத்தியமாக்கத் துடிக்கும் லட்சியம் கொண்ட ஓர் ஆவேச இளைஞன் நெடுமாறன் (கோபிநாத்). மதுரை சோழ வந்தானைச் சேர்ந்த நெடுமாறனுக்கு குறைந்த விலையில் எல்லோரும் பயணம் செய்யும் வகையில் ஒரு விமான நிறுவனத்தைத் துவங்க வேண்டுமென ஆசை. ஆனால், அந்தக் கனவு எளிதில் கைகூடுவதாயில்லை. ஏற்கனவே அந்தத் தொழிலில் இருப்பவர்களும் அதிகார வர்க்கமும் சேர்ந்துகொண்டு முட்டுக் கட்டை போடுகின்றனர். நெடுமாறனின் திட்டங்களைச் சீர்குலைக்கின்றர். “இருபதாண்டுகளாக டாட்டாவாலேயே முடியாததை நீ எப்படி செய்ய முடியும்” என்று மாறனைப் பார்த்து வில்லன் (விஜய் மல்லையா) ஓரிடத்தில் வினவுகிறார். ஆனால், விடா முயற்சியால் மாறன் தன் கனவை நனவாக்குகிறான். எதிரிகளால் நிலத்திலும் வானிலும் உருவாக்கப்படும் தடைகளைத் தகர்த்தெறிந்து, தாய் உள்பட ஊர்க்காரர்கள் மதுரையிலிருந்து தனது நிறுவன விமானத்தில் வந்து இறங்குவதை, உணர்ச்சி பொங்க மாறன் வரவேற்பதுடன் படம் முடிகிறது.

நெடுமாறனாக சூர்யா, பாத்திரத்துக்கு வேண்டியதைக் கச்சிதமாகக் கொடுத்திருக் கிறார். இவரது நடிப்பும் ஒத்துழைப்பும் படத்திற்கு பெரும்பலம். ஒரு நடிகனாகவும் தயாரிப்பாளராகவும் இரட்டிப்பு மகிழ்ச்சியை இந்தப் படம் நிச்சயம் அவருக்குக் கொடுக்கும். விருதுகளும் வீடு தேடி வரும்.

நாயகி அபர்ணா பாலமுரளி, (ஐந்து வருடங்களுக்கு முன்பு மலையாளத்தில் பகத் பாசிலின் ‘மகேஷிண்ட பிரதிகாரம்’ மூலம் அறிமுகமானவர்) மணிரத்னம் படத்தில் வருவது போல ஒரு துடுக்கு நாயகி. கேள்வி மேல் கேள்விகள் கேட்டு நிபந்தனைகளுடன் மாறனை திருமணம் செய்துகொள்கிறார். பேக்கரி தொழில் வைத்து வெற்றி வாகை சூட வேண்டு மென்பது இவர் லட்சியம். அதுபோலவே சூடிவிடுகிறார். பிறகு மாறனின் லட்சிய வெற்றிக்கு உந்துசக்தியாகத் திகழ்கிறார். இடையில், “நீ எச்சி ஊற வைக்கிற; எதுக்கு தள்ளி நிக்கிற; சூதானமா அங்கே இங்கே கிள்ளி வைக்கிற” என்பது போன்ற வரிகள் கொண்ட பாடல் ஒலிக்க, தலைவனுடன் மையல் கொள்கிறார்.

இவர்களுடன் ஊர்வசி, கருணாஸ், வில்லனாக வரும் பரேஷ் உட்பட எல்லோ ருமே சிறப்பாக நடித்திருக்கின்றர். ஊர்வசி எவ்வளவு பெரிய மிகச்சிறந்த நடிகை என்பதற்கு கணவனின் சடலம் எடுத்து முடிந்தபின் காலதாமதமாக வீட்டுக்கு வரும் ஒற்றை மகனிடம் அவர் காட்டும் உரிமை, கோபம், பாசம் இயலாமை என எல்லாமும் கலந்த சீற்றம் இன்னொரு சாட்சி. ஆனால், எல்லா நல்ல கலைஞர்களையும் துரத்தும் சாபம் அவரையும் துரத்துகிறது. வயதுக்கு மீறிய முதுமை. ஊர்வசி உடல் ஆரோக்கியம் மேம்பட்டு இன்னும் பல்லாண்டு கலைச் சேவை புரிய வேண்டும்.

ஜீ.வி. பிரகாஷின் பாடல்கள், படத்திற்கு கூடுதல் பலம். படத்தோடு ஒன்றியிருக்கும் அவரது பின்னணி இசையில் அவரது வளர்ச்சி தெரிகிறது.

‘ஏர் டெக்கான்’ கோபினாத் 2012இல் தனது சுயசரிதையை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார். (தமிழில் கிழக்கு பதிப்பகம் ‘வானமே எல்லை’ என்ற தலைப்பில் இதனை வெளியிட்டுள்ளது) தனியொரு மனிதனாகப் போராடி வென்ற கோபிநாத்தின் வாழ்க்கைச் சரிதையில் ஒரு வெற்றிப் படத்திற்கான கதை இருப்பதை இயக்குநர் சுதா கொங்கரா உணர்ந்திருக்கிறார். அதன் உரிமையை வாங்கி, அதற்கான திரைக்கதை அமைப்புக்கு மட்டும் ஆறு ஆண்டுகள் செலவழித்திருக்கிறார். அவரது உழைப்பு வீண் போகவில்லை.

கோபிநாத்தின் நீண்ட சுயசரிதையில் ஒரு குறிப்பிட்ட அத்தியாத்தை மட்டும் எடுத்து திரைக்கதையாக்கி இருக்கின்றனர் சுதா கொங்கராவும் அவரது குழுவினரும். ஆனாலும், படத்தின் ஆரம்பக்கட்ட காட்சியில் ஆரம்பித்த பரபரப்பு, கடைசி காட்சி வரை நீடித்திருப்பது இயக்குநரின் மெனக்கெடலை வெளிப்படுத்துகிறது.

தமிழ் திரை ரசிகர்களுக்கு சொல்லப்படாத கதைக்களம் இது. விமானப் போக்கு வரத்தில் இருக்கும் சட்டங்கள், அதை முழுக்க தன்வசமாக்கிக் கொண்டிருக்கும் கொழுத்த பண முதலைகள், அவர்களின் சதுரங்க விளையாட்டுகள் என்று கொஞ்சம் பிசகினாலும், ஓர் ஆவணப் படமாகப் போய்விடும் அபாயம் இருக்கிறது. ஆனால், மிகச் சாமார்த்திய மாக அதைக் கையாண்டு, அதை வெற்றி பெறச் செய்திருக்கிறார் சுதா கொங்கரா.

படத்தில் பல இடங்களில் கண்ணீர் சிந்தவைக்கும், உணர்ச்சிவசமான காட்சி கள் இடம்பெற்றுள்ளன. கோபிநாத் ஒரு விமான நிறுவனத்தைத் துவங்குவதற்கு



முன்பு எதிர்கொண்ட பிரச்சினைகள், திரைக்கு ஏற்றபடி மாற்றப்பட்டிருக்கின்றன. இந்தச் சின்னச் சின்ன பிரச்சினைகளை விட்டுவிட்டால், ஒரு ரசிக்கத்தக்க படம் இது.

---

## கிருஷ்ணர்...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

உறுதி செய்யப்படுகின்றது. கிருஷ்ணர் பிறந்த மதுராவுடன் விருந்தாவனத்தையும் மற்றும் கோவர்த்தனையும் இணைத்து வடமதுரா என்று சொல்வது வழக்கம். மேலும் இந்த வடமதுராவை ஏழு முக்தி தேசங்களில் ஒன்றாகவும் கருதப்படுகின்றது.

இங்கு குறிப்பிட்டுள்ள ஐந்து திருத்தலங்களை டெல்லியில் இருந்து சொகுசு வாகனம் மூலம் சென்று தரிசிப்பதற்கு குறைந்த பட்சம் இரண்டு நாட்கள் தேவைப்படும். மதுராவில் தங்கு வதற்கு சொகுசு ஹோட்டல்கள் மற்றும் தரமான சத்திரங்கள் உள்ளன

---

## பொருளாதாரம்...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

வெளியிடப்பட்டுள்ளது. வர்த்தக நிலையங் கள், அரிசி ஆலைகள் இந்த நிர்ணய விலைக்கு அதிகமாக விற்பனை செய்ய



முடியாது என்றும் அவ்வாறு விற்பனை செய்தால் நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்றும், இது தொடர்பில் விற்பனை நிலையங்கள் மீது கண்காணிப்புகள் மேற்கொள்ளப்படவதாகவும் அரசாங்கம் அறிவித்திருந்தது.

ஆனால், 95 ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்ட அரிசி 130 ரூபாவிற்கும் அதிகமாகவே விற்பனை செய்யப்படுகின் றது. அதற்கு எதிராக எவ்வித நடவடிக்கை களும் இல்லை. ஏற்கனவே அதிக விலைக்கு கொள்வனவு செய்யப்பட்ட அரிசியை தற்போதைய நிர்ணய விலைக்கு விற்பனை செய்ய முடியாது என வர்த்தகர்கள் கூறுகின்றனர். இதற்கான பரிகாரத்தையும் அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும்.

அறிவிக்கப்படும் விடயங்கள் நடைமுறை யில் இல்லாமலிருக்கும் போது மக்கள் ஏமாற்றமடைகின்றனர். அரசாங்கத்தின் அனைத்து தீர்மானங்களும் நடைமுறை யில் இருக்க வேண்டும் என்பதையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

---

## பிள்ளைகளின்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

பாதிக்கப்படுகின்றனர். இவர்கள் அடிக்க இரு காரணங்கள் கூறப்படுகின்றன. பெற்றோர் தாம் தமது பெற்றோரிடம் அடி வாங்கி இருக்கின்றனர். ஆகவே குழந்தை களை நல்லொழுக்கத்துக்குக் கொண்டுவர இது மட்டும்தான் வழி என எண்ணு கின்றனர். அடுத்து, பதற்றம், கட்டுப்படுத்த முடியவில்லை என்ற கையாலாகாத உணர்வு, கோபத்தை வெளிப்படுத்த இந்த உணர்வை பெற்றோர் வெளிப்படுத்தல். அடியும், வலியும் எதையும் மாற்றாது என்பதை புரியாதோர் அதிகம். இதனால் குழந்தைகள் பயத்துடன் வாழும். சில குறிப்பிட்ட தூண்டுதல்களின்போது வன் முறையாக நடந்து கொள்வது தவறில்லை என எண்ணத்தூண்டும். குழந்தைகள் மலரைப் போன்றவர்கள். அவர்களின் அனைத்து பரிணாமங்களின் வளர்ச்சி, முன்னேற்றம் என்பதே இன்றைய தேவை. வாழ்க்கைப் பாதை என்பது தேர்ந்தெடுக்கப்பட வேண்டியது,




அமைவ தன்று. நிகழ்காலத்தை சரியாகப் பயன்படுத்திக் கொண்டால் எதிர்காலம் நம்மை வரவேற்கும். எனவே பிள்ளையின் உளநலத்தில், உளவிருத்தியில் அக்கறை காட்டவில்லையாயின் பிள்ளையின் எதிர் காலம் கேள்விக்குறியாகிவிடும்.



# நாய்கள் வால்களைத் துரத்துவதைப் போல

**Words of Peace**
பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்து கொள்ள:
**416 431 5000**
**www.timelesstoday.com**

## LIKE DOGS CHASING TAILS

உலகெங்கும் சுற்றிவந்து தனிநபர் அமைதி மற்றும் நிறைவு பற்றி உரையாற்றிவரும் பிரேம் ராவத், அமைதியின் அனுபவம் என்று வரும்பொழுது மக்கள் தமது சொந்த வால்களையே துரத்திச் செல்லும் நாய்கள் போல் ஆகிவிடுகிறனர் என்று கூறுகிறார். தனது சொந்த வாலையே துரத்திச் செல்லும் நாய் ஒன்றை நீங்கள் எப்போதாவது கண்டிருக்கிறீர்களா என பிரேம் ராவத் கேட்கிறார். நான் வளர்ந்தபோது எம்மிடம் ஒன்று இருந்தது. அது லூாசா அப்சோ இனத்தைச் சேர்ந்தது. இது சிறியதாக இருந்த போதும் என்னுடைய தந்தையைத் தவிர எல்லோருக்குமே அதில் பயம். எனது தந்தை மிகவும் கவனத்தில் கொள்ளப்படுவார், அவர் வீட்டிற்கு வெளியில் இருக்கும் போது அந்த நாயும் அங்கேயே இருக்கும். எவராலும் அண்மையில் செல்ல முடியாது.

அது சிறியதொரு நாயாக இருந்தபோதும் அசையும் எல்லாவற்றையும் கடிக்க விருப்பம் கொண்டது. அது கோபமடையும். அது தனது கடைக்கண்ணால் தனது வாலைக் கண்டாற்கூடப் போதும் அவ்வளவு தான். அந்த வாலைத் தாக்குவதற்காக அது வட்டமாகச் சுற்றிச்சுற்றி ஓடிக் கொண்டே இருக்கும். இது சில நிமிடம் மட்டும் நடைபெறும் ஒன்றல்ல. அது தொடர்ந்து போய்க்கொண்டே இருக்கும். அது மிகவும் தற்பாதுகாப்பானது. பின் புறத்தில் இருந்து ஏதாவது வருவதைக் கண்டால் அதற்கு அதைத் தாக்க வேண்டும். தனது சொந்த வாலையே துரத்திச் செல்லும் அந்த நாய்க்கு உங்களால் எவ்வித அறிவுரையை வழங்க முடியும்? நீங்கள் என்ன ஆலோசனை வழங்குவீர்கள்.? ஒன்று அமைதியடையச் சொல்லலாம். இரண்டு அதனால் எவ்வித பிரயோசனமும் இல்லை என்று கூறலாம். மூன்றாவதாக எப்பொழுதாவது அது அதைப் பிடித்தாலும் அது அதிகமான வேதனையை அனுபவிக்கும். அது அதைச் செய்ய வேண்டியதில்லையெனவும் அதை ஓய்வாக இருக்கும்படியும் நீங்கள் கூறலாம்.

அந்தக் குறிப்பிட்ட நாய், அதன் பெயர் ரொமி-அது நீங்கள் கூறுவதைக் கேட்குமா? இல்லை ஒருபோதும் கேட்காது. ரொமி ஒருபோதும் நீங்கள் கூறுவதைக் கேட்காது. ரொமியின் நாளைப் பாதுகாக்கக் கூடிய ஒரே விடயம் அதன் வாலை விட நீங்கள் அதற்குக் கவர்ச்சியாகத் தெரிவதுதான். அப்போது அது வாலை மறந்துவிடும்.

இன்னுமொரு விடயம் ரொமி ஒருபோதும் தன்னை முகம் பார்க்கும் கண்ணாடியில் இனங் கண்டுகொள்வதே இல்லை. அது தன்னை ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியில் கண்டால் அது தொடர்ந்து நிறுத்தாமல் குலைத்துக்கொண்டேயிருக்கும். அது மிகமிக ஆத்திரம் அடையும். நான் ஓர் உவமானத்திற்காகவேதான் ரொமி பற்றிக் கதைக்கிறேன். ஏனெனில் நாமும் அந்த நாயைப் போலத்தான் இருக்கிறோம். மக்கள் தமது சொந்த வாலைத் துரத்திக் கொண்டு இருக்கின்றார். நாம் எம்மை உணர்ந்து கொள்வதில்லை. எம்மை முகம் பார்க்கும் கண்ணாடியில் காணும் ஒவ்வொரு தடவையும் நாம் குரைக்கிறோம். இது என்ன? எனக் கேட்கிறோம். நான் யார்? இது தொடர்ந்து போய்க்கொண்டே இருக்கிறது."

ஒவ்வொரு மனிதனின் உள்ளேயும் ஏற்கனவே உள்ள அமைதியைத்தான் ஒவ்வொருவரும் தேடிக் கொண்டிருக்கின்றனர் என திரு. ராவத் கூறுகிறார். எனினும் நாம் அதை எப்போதும் வெளியில் தான் தேடிக்கொண்டிருக்கிறோம், எமது சொந்த எண்ணக் கருத்துக்களையும் ஆவல்களையும் துரத்திக்கொண்டிருக்கிறோம். எமது ஆனந்தம் மற்றும் நிறைவு, அசௌகரியம் மற்றும் துக்கம் என்பனவற்றை நாம் இருக்கும் சூழ்நிலையுடன் தொடர்புபடுத்திக் காண்கிறோம். மக்கள் தனிநபர் அமைதி பற்றிக் கவனத்தில் கொள்வதில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் உலக அமைதி பற்றிப் பேசுகின்றர்.

இரு வித்தியாசமான நாடுகளால் - பிரேசில் மற்றும் இத்தாலி என்னும் நாடுகளால் அமைதியின் தூதுவர் என நான் கௌரவிக்கப்பட்டுள்ளேன் என அவர் கூறுகிறார். எனினும் நான், மேலும் மக்கள் உலக அமைதி என்னும் எண்ணக்கருத்தை விட்டு விட வேண்டும் எனக் கூறுகிறேன். உங்கள் சொந்த உலகிற்கான அமைதிபற்றி கவலைப்படுங்கள், ஏன் எனில் உலகில் அமைதியில்லை அங்கே ஒருபோதும் அது நடைபெறப் போவதில்லை.

"மனிதர் என்ற ரீதியில் எமக்குத் தெரிவு உள்ளது. நீங்கள் எதைத் தெரிவு செய்கிறீர்கள்? உங்களுக்குத் தெரிவொன்று உள்ளது. இந்த உலகமானது அற்புதமானதொரு சேர்கஸ் ஆகும். மிகப் பெரியது. ஆனால் அது ஒரு நாள் போய் விடும். ஒரு நாள் அது மூட்டை முடிச்சுக் களைக் கட்டிக் கொண்டு எல்லாமே போய்விடும். நாளைய தினம் அல்ல. அதற்கு கோடிக்கணக்கான கோடிக்கணக் கான ஆண்டுகள் எடுக்கும், ஆனால் அது முடிவிற்கு வந்துவிடும். ஆகவே நீங்கள் எதைத் தெரிவு செய்கிறீர்கள்? மக்கள் புத்தகங்களை எழுதுகின்றனர். ஏனைய மக்கள் அந்தப் புத்தகங்களை வாசித்து விட்டு "அவ்வளவு தான் எனக்" கூறுகின்றனர். ஏதோ ஒன்று புத்தகத்தில் எழுதி இருக்கிறது என்ற காரணத்தினால் எமது புரிந்து கொள்வதற் கான நமது சாத்தியத்தை கைவிட முடியுமா? அது போதுமானதா? இல்லை. அதுவல்ல உயிர் வாழ்தல். அது பிரதி பண்ணுவது மட்டுமே. எப்போது அங்கே நிச்சயமில்லாத் தன்மை உள்ளதோ அப்போது அதைத்தான் ஒரு மனிதன் செய்வான்.

நம்முள்ளே மீளக் கண்டுபிடிக்கப்படும் அந்த அமைதிதான் இறுதிவரை இருக்கும் அமைதி என திரு. ராவத் கூறுகிறார். உங்களின் அமைதி உங்கள் உள்ளேதான் இருக்கிறதென்று நான் கூறும்போது அது உங்களுக்கு ஒரு செய்தியாக வருகிறதா? இதுபற்றி உங்களுக்கு ஏற்கனவே தெரியும் அப்படியல்லவா? அதைத்தான் சோக்கிரட்டீசும் கூறினார். எல்லா விடயங்கள் பற்றியும் கேள்வி கேளுங்கள் எனக் கூறிய தத்துவ ஞானிகளில் அவரும் ஒருவர். ஆனால் அவர் "உன்னையே நீ அறிவாய்" என்னும் பதிலினையும் கொடுத்துள்ளார். அதைத் தான் நானும் கூறுகிறேன்.
"உன்னையே நீ அறிவாய்".



MathTUTORIAL421

Answers to tutorial 420

1)Given that cscA =sec 0.75 and thatAlies in 2nd quadrant,determine the measure of angle A

CSC A=1/sinA, sec A =1/cos .75

1/sinA =1/cos .75 , sinA =COS.75

Sin A =.7317 , $\sin^{-1}(.7317)$ = A

A =2.32

2)The 1st one start with $x^4$ therefore it has odd number of tuning points

2nd one start with $x^5$ therefore it has even number of turning points

Tutorial 421

Questions

1)For each function determine the x-intercepts ,asymptotes and intervals of positive and negative

a) $f(x)=\frac{3}{x+5}$ b) $f(x)=\frac{x+5}{4x-1}$ c) $f(x)=\frac{x+2}{5(x+2)}$

2)Solve $\frac{\log(35-x3)}{\log((5-x)}=3$

3)Solve each equation

a) $\log_3(\log_3 x)=0$ b) $\log_2(\log_4 x)=1$

4)If $(1/2)^{x+y}=16$ and $\log_{x-y}8=-3$ calculate the values of x and y

5)A VOICE MAIL SYSTEM HAS 1253 USERS .A pas word to open a mailbox is a sequence of length r formed from the digits 0 to 9 .To ensure confidentiality there should be at least 1000 possible password for every user . What is the smallest possible value of r

6)A sorting algorithm puts lists of numbers into increasing order . To check the algorithm , a programmer prepares all possible lists of integers 1 ,2 .....100. Of these lists how many begin with an integer less than 10 and end with an integer greater than 90. (leave your answer in terms of P(n,r)

By Mr S.F .Xavier(Teacher)6473409490/4167 322228

# கேரளா...

09ஆம் பக்கத்தொடர்ச்சி


கலாச்சாரம் என்று சொல்லலாம். அந்தளவுக்கு கேரளாவின் உணவுமுறை தனித்துவமானது. அப்பம், புட்டு, சிவப்பரிசி சாதம், மோர் குழம்பு, அவியல், கூட்டுக்கறி, கப்பக்கிழங்கு போன்ற கேரளாவுக்கே உரித்தான பாரம்பரிய உணவு வகைகளேயே கேரள பெண்கள் இன்றும் தொடர்கின்றர். கேரளாவில் மட்டன் உணவுகள் பிரபலம் என்றாலும் பெரும்பாலும் பெண்கள் அதை சாப்பிடுவ தில்லை. அசைவ வகைகளில் மீன் உணவுகளையே பெண்கள் விரும்பி உண்கின்றனர். துரித உணவுகள் மேல் வரிவிதிப்பு செய்த ஒரே மாநிலம், நூடல்ஸ்க்கு தடைவிதித்த முதல் மாநிலம் என்று துரித உணவுகளை கட்டுப்படுத்த அம்மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருவதால் கேரளாவில் துரித உணவு களுக்குப் பெரியளவில் வரவேற்பில்லை. அதனால் பெண்களும் அதை விரும்புவ தில்லை. இந்த கட்டுக்கோப்பான உணவு முறையால் கேரளா பெண்கள் மெலிதாக வும் (slim), ஆரோக்கியமாகவும் காட்சியளிக்கின்றனர்.



**8. கண் அழகு:** கேரளப் பெண்கள் அப்பிள் பழத்தை நறுக்கி தேனில் ஊறவைத்து சாப்பிடும் பழக்கம் கொண்டவர்கள். இது அவர்களின் கண்களை அழகாக்குவதுடன் கண் பார்வையையும் அதிகரிக்க உதவு கிறது. அத்துடன் சிறிதளவு தோடம்பழ சாறை ஃப்ரீஸரில் (freezer) வைத்து அது ஐஸ் கட்டியானவுடன், மெல்லிய வெள்ளைத் துணியில் கட்டி, கண்ணுக்கு மேல் ஒத்தடம் எடுப்பார்களாம். இதனால்தான் கேரளப் பெண்களின் கண்கள் கருவளைய மின்றி கோலிக்குண்டு போல் வசீகரமாகக் காணப்படுகிறது. பெரும்பாலும் கன்சீலர், ஐப்ரோ பென்சில் போன்ற கண் அழகு சாதனங்களை முக்கிய நிகழ்ச்சி நாட்களை தவிர மற்ற நாட்களில் அதிகம் பயன்படுத்துவதில்லை.

**9. யோகா:** கேரளப் பெண்கள் யோகா மீது நம்பிக்கை கொண்டவர்கள். யோகா மன அமைதியை மட்டுமின்றி, உடல் அழகையும் தரக்கூடியது என்பதை மலையாளப் பெண்கள் நிரூபித்திருக்கின்ற னர். வாயை இறுகமூடி வாய் கொப்புளிப் பது போல வாயை அசைக்கின்றனர். குளிர்பானங்களில் (cool drinks) ஸ்ட்ரோ (Straw) போட்டு உறிஞ்சுவது போல காற்றை உள் இழுத்து ஊதுகின்றனர். வாயை முடிந்த அளவு திறந்து நிறுத்தி வைக்கின்றனர். இதுபோன்ற யோகா பேஷியலால் முகத்தில் உள்ள அனைத்துத் தசைகளும் செயல்பட்டு, முகச்சுருக்கம் போன்ற பிரச்சினைகளை நீங்கி, கன்ன எலும்புகளை வலுப்படுத்துகிறது. இதனால் முகமும், உதடுகளும் அழகு பெறுகின்றன.

**10. காலநிலை:** கேரளாவின் சீதோஷ்ண நிலையும் இதமான தட்பவெப்பமும் ஒரு காரணம் என்கிறது ஆய்வுகள். கேரள மக்கள் பெரும்பாலும் ஆற்று நீரையே குளிக்கப் பயன்படுத்துகின்றனர். மலையில் இருந்து பலவித மூலிகைச் செடிகளை தழுவி வரும் ஆற்று நீரில் அதன் மூலிகைக் குணங்களும் இயற்கையாகவே கலந்து விடுகின்றன. இந்த நீரில் குளிக்கும்போது சருமம் ஆரோக்கியமாக இருக்கிறது. மேலும் கேரளா மேற்குத் தொடர்ச்சி மலைக்குள் அமைந்திருப்பதால் அங்கு வளரும் மூலிகைத் தாவரங்கள் மற்றும் மரங்கள் வெளியிடும் வாயுக்கள் காற்றுடன் கலந்து விடுவதும் ஒரு காரணம்.

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough



JOBS! JOBS! JOBS!

TEMP EMPLOYMENT AGENCY



- General Labor
- Packers
- Machine operator
- Forklift operator




Note: Must be able to lift heavy packages

Tel: 416-292-2929 Fax: 416-292-9857 OR

80 Nashdene Rd. Building - D Unit 89
Scarborough ON. M1V 5E4

## BASEMENT FOR RENT

**MIDDLEFIELD & STEELES**
2 Bedroom Bsmt for rent. Sep. Entrance Close to all facilities. No parking Avail. immediately.
Please call : **416.388.2401**

**MEADOWVALE & ELLESMERE.**
2 Bedroom, 1 bathroom bsmt for rent. 1 parking. Close to all facilities. Avail. December 01, 2020
**Contact: 416.546.0466**

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry, internet. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.710.2708**

**MARKHAM & STEELES**
3 bedroom newly renovated, basement for rent. Sep. entrance, parking. Small family preferred. No smoking, no pets.
**Contact: (647) 712-2692**

**16TH AVENUE & 9TH LINE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking, Laundry. Rent $1,450 +utilities. Close to all facilities. Avail. immediately.
**416.618.3660 / 647.367.0220**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. immediately.
**416.627.2239 / 416-613-1792**

**MIDLAND & EGLINTON**
2 Bedroom walk out Bsmt for rent. Close to all facilities.
**647.978.2785 / 905.201.8525**

**TAUNTON & SIMCOE (Oshawa)**
3 Bedroom fully renovated bsmt for rent. Sep. entrance, Laundry, 1 1/2 Washroom, 1 Parking. Family preferred. Avail. November. **Call or text 647 388 5295**

**MCCOWAN & BRIMORTON**
2 Bedroom Newly renovated bsmt for rent. Sep. entrance, kitchen, parking, laundry. Close to all facilities. Avail. immediately
contact: **647-761-7048**

**SEWELLES ROAD & MCLEVIN**
2 Bedroom Newly renovated bsmt for rent. Near to Malvern Mall. Couple with a little kid preferred. Avail. December 01, 2020. contact: **647-657-6996**

**MARKHAM & MCNICOLL**
1 bedroom bsmt for rent. Sep. Entrance parking. Close to school, TTC & all facilities. Avail. immediately.
**647-515-1631/416.430.0999**

**MARKHAM & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance Families only 2 Adult & 2 children. Close to schools, Avail. from December 1, 2020.
**905.554.7928 / 647.401.7928**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

30 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை வெளியிடப்படும் (vlambaram.com) சிறு விளம்பரங்களைக் கொண்ட 14,15,16,17 ஆகிய பக்கங்களின் அச்சுப் பிரதிகளை GTA Square இலும் ஏனைய முன்னைய தமிழ் வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

## BASEMENT FOR RENT

**MCCOWN & MCNICLE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.823.3667**

**KENNEDY & LAWRENCE**
1 Bedroom bsmt for rent, Sep. entrance, Include kitchen, washroom & Sep. laundry. Close to all facilities.
**Call or Text - 647.833.8597/647.539.2860**

**ELLESMERE & ORTON PARK**
2 Bedrooms Newly Renovated Basement For RENT! No Pets. Kitchen, Washroom, Parking. Available Immediately!
**Call at (647) 998-0181**

**LAWRENCE & SCARB.GOLF CLUB**
3 Bedrooms, 1 washroom, 1 living room bsmt for rent. Sep.entrance Available Immediately!
தொடர்புகளுக்கு: **416.357.8079**

**KENNEDY & EGLINTON**
Basement apartment for rent. Walk to Subway. Available immediately.
தொடர்புகளுக்கு: **416-833-7729**

**BIRCHMOUNT & ELLESMERE**
2 bedroom basement for rent. Separate entrance .1 parking. Close to all facilities
தொடர்புகளுக்கு: **416.451.9520**

**Morningside & Morningview Trail**
2 Bedrooms newly renovated Bsmt for Rent. Living room & 1 parking. Family preferred.
தொடர்புகளுக்கு: **(416) 564- 4200**

**MCCOWAN & DENISON**
2 Bedroom Bsmt for rent. Sep. entrance 1 bathroom Sep. washer and Dryer. Close to all facilities.
**647-680-3167/ 905-294-8316**

**MARKHAM & STEELES**
1 Bedroom new bsmt for rent. Sep.entrance, parking. Female student or family preferred. Close to Bus. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.829.3212**

**NEILSON & MCLEVIN**
1 Bedrooms Bsmt for Rent. Sep. Entrance. No pets or no smoke. Close to 401, mall, ttc @door uft, centaial. Parking
**416.834.1081/kugancanada@yahoo.com**

மேலும் பக்கங்கள் 15, 16, 17

## BASEMENT FOR RENT

**ELLESMERE & NEILSON**
1 room fully renovated bsmt for rent. kitchen, Sep. entrance, Sep. patio Sep. laundry. Family preferred.
**Please call: 416.560.1812**

**MORNINGSIDE & FINCH**
1 bedroom bsmt for rent. Sep. Entrance, 1 parking. Students / Couple preferred. Avail. immediately.
**416.455.5546 / 416.267.0072**

**MARKHAM & STEELES**
3 bedroom bsmt for rent. Sep.entrance, laundry, utilities. Close to bus, bank, store. Avail. immediately.
**647.772.5546 / 647.856.9907**

**MIDDLEFIELD & FINCH**
2 Bedrooms renovated Bsmt for Rent. Sep. entrance, sep. laundry. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு : **647-449-7440**

**MCCOWAN & BRIMORTON**
Newly renovated 1 Bedroom bsmt with sep.entrance, Rent: $1200+ 40% Utilities. Suitable for a couple or single occupancy.
**Contact: Jude (416.884.0513)**

**BRIMLEY & ELLESMERE**
3 Bedrooms Bsmt for Rent. Sep. Entrance, Parking Included. Close to Scarb. town center. Student only. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647-883.5571**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & STAINES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, sep. laundry. Big open kitchen. Washroom. 1min. walk to TTC (#133, #39B, #116, #53A)
தொடர்புகளுக்கு: **(416).678.4849**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & HIGHGLEN**
2 bedroom bsmt for rent. Sep. entrance. Rent+40% utilities. Close to all facilities.
தொடர்புகளுக்கு:
**647.972.7620**

## ROOM FOR RENT

**MARKHAM & SHEPPARD**
1 bedroom for rent in a house. No parking. Only for male. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.648.1673**

**MARKHAM & EGLINTON**
1 room for rent. Shared washroom., kitchen, wifi Included. Close to all facilities. Seniors preferred.
தொடர்புகளுக்கு : **647.339.1989**

**MARKHAM & LAWRENCE**
1 bedroom for rent in the basement. Sep.entrance & parking. Near Cedarbrae mall & other all facilities.
தொடர்புகளுக்கு: **416.267.0455**

**SCARB.GOLF CLUB RD & LAWRENCE.**
1 Room for rent in a basement of a house shared kitchen and washroom. Rent $450 Per month. Avail. immediately.
**416.454.9986/ 416.219.4936**

**MARKHAM & HIGHGLEN AVE**
சந்திக்கு அருகாமையில் 3 அறைகளைக் கொண்ட **bsmt** வாடகைக்குண்டு. Sep. entrance, sep. laundry. Avail. December 01
தொடர்புகளுக்கு: **647-762-5804**

**MARKHAM & ELLESMERE**
1 master bedroom for rent a 2 bedroom apartment. Rent. $875. Female or couple preferred. Avail. December 01, 2020.
**Please call: 416.725.4735**

**KENNEDY & EGLINTON**
Rooms for rent( brand new). Sep.entrance. parking. Subway station located walking distance. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647-501-2720**

**LAWRENCE AVE & MORNINGSIDE**
1 Room for rent in a basement. Looking for a Male. Sep.entrance, car parking, and laundry included. Close to TTC & malls.
தொடர்புகளுக்கு : **365.338.3406**

**WARDEN & LAWRENCE**
3 அறைகள் கொண்ட Bsmtஇல் 1 அறை வாடகைக்கு உண்டு. ஆண்கள் மட்டும். புகைத்தல், மது இல்லாதவர்கள் விரும்பத்தக்கது.
மேலதிக தொடர்புக்கு: **647-708-3444**

**NELISON & MILITARY TRAIL**
2 bedrooms for rent. Available All amenities included ( Laundy onsite, interne). Close to all facilities.
தொடர்புகளுக்கு: **647.205.9253**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
2 bedroom, Kitchen, separate entrance and separate laundry, parking, closer to all the facilities.
**Phone number:**
**416.824.5299/647.448.5117**
**647.922.5117**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & OLD FINCH**
2 large bedrooms & a full washroom
1 Parking included , with sep. entrance, close to TTC , school , and all facilities. If need extra parking also avail. with extra payment, bachelors preferred, no pets, no smoke and alcohol.
தொடர்புகளுக்கு: **647-982-2160**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE AVE. & MORNINGVIEW**
2 bedroom bsmt for rent. Sep. entrance. 1 parking, laundry. Close to all amenities. NO SMOKING & NO PETS. New couple or small family preferred. Avail. immediately. Rent plus utilities.
**Please call: 416.560.0327 After 6:00pm**

## BASEMENT FOR RENT
**KINGSTON & MORNINGSIDE.**
1 Room for rent. Laundry available. We are looking for females only.
Avail. immediately.
Pls call: **416-289-9507**

## BASEMENT FOR RENT
**Morningside &shepherd**
2 bedroom basement (large)
Separate entrance
Parking, Sep. Laundry
Avail. January 01, 2021.
**Contact : 647.989.0463**

## BASEMENT FOR RENT
**MARKHAM & 14TH AVENUE**
2 bedroom basement bsmt for rent. Sep. entrance & Sep. laundry. 5 minute walk to Markham road. No pets and no smoking. Looking to rent out to a family. 40% utility. First and last payment required. 1 parking. Avail. Immediately
தொடர்புகளுக்கு : **647-631-5745**

## BASEMENT FOR RENT
**BIRCHMOUNT RD & SHEPPARD AVE**
2 bedroom bsmt for rent.
Sep. entrance. Close to main rd, betchelore, girls student welcome.
Avail. November 01, 2020.
contact:
**416.899.9199**

## BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
2 Bedroom newly renovated bsmt for rent. 2 washroom, side door, included car parking.
More information please to call:
**647-215-2533/647-588-2533**

## BASEMENT FOR RENT
**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entranceParking, laundry. Rent+utilities. Close to all facilities.
Avail. immediately.
**647.627.0202/416.617.1767**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & LAWRENCE**
3 bedroom , 2 washroom walkout basement for rent. Parking, laundry. Close to school & shopping centers. No smoking & no pets.
Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **647.981.1997**

## BASEMENT FOR RENT
**Markham & Steeles**
2 Bedroom + 2 Full washroom+ Kitchen + Laundry. Newly done basement apartment for rent with 1 car parking. Avail. starting December 01, 2020.
Contact me at: **416.648.0257**

## BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
2 bedroomsbsmt for rent. Close to Walmart and Costco. Very convenient area for schools and highschools. Has a sep. entrance. 2parking spaces. No smokers and pets allowed. Avail. December 1, 2020.
தொடர்புகளுக்கு: **(647)-761-5599**

## BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
2 Bedroom Newly Renovated basement for rent. Separate entrance, kitchen, 1 and a half bathrooms, parking, laundry. Close to all facilities including grocery stores, gyms, malls and etc.
Avail. Starting December 01, 2020
**Contact: 647-786-2307**

## ROOM FOR RENT
**MARKHAM & LAWRENCE**
Room for rent.
Close to all facilities.
Avail.immediately .
தொடர்புகளுக்கு:
**647.721.0838**

## ROOM FOR RENT
**MARKHAM ROAD & DENISON**
1 Bedroom for rent in the Basement. Rent $600. Close to all Amenities. Includes 1 spot parking & high speed Rogers internet. Good for a single Bachelor Male. Avail.immediately
தொடர்புகளுக்கு: **416-666 6403**

## CONDO FOR RENT
**SUMACH & DUNDAS STREETS**
1 bedrooms + dent condo for rent.
Close to all facilities.
Avail. December 01, 2020.
தொடர்புகளுக்கு: **416.993.4951**

## HOUSE FOR RENT
**NEILSON & MCLIVEN**
3 Bedroom house for Rent. parking, laundry. Close to all Facilities.
Avail. immediately.
**647.534.5617 / 416.609.1484**

---

**Ellesmere & Orton Park**
MAINFLOOR for RENT.
3 Bedroom Newly Renovated
No Pets. Washroom, kitchen, Parking.
Avail. immediately.
**Call at (647) 998-0181**

## HOUSE FOR RENT
Split Level 3 House for Rent
**Meadowvale & Ellesmere -** Close to UofT & Hwy 401. Newly renovated 4 Bedrooms, 2 Washrooms house for rent. Sep.entrance, 2 or more Parking, sep.laundry, Gas Fireplace, Private Patio deck. Close to All amenities, TTC & Durham Region Transit. Available immediately. Girl Students or family Welcome.
Contact: **416-871-2475**

## FOR RENT
**HOUSE FOR RENT**
**NEILSON& MCLEVIN - Scarborough**
3 bedroom 2 story detached house with 2 bedroom bsmt with 2 car garage full house for lease. Avail. November 01, 2020.

**BASEMENT FOR LEASE**
**9th LINE & 14TH AVENUE-Markham**
2 Bedroom fully renovated bsmt with 2 car parking, sep. laundry.
Avail. immediately.

**416.917.0557**
**Rajah Masillamany**
**(HomeLife / Future Realty Inc.)**

## HOUSE FOR RENT
**MIDLAND & MCNICOLL**
3 Bedroom + 2 washroom house with finished basement ( 2Bed+1 washroom) for rent.
Close to all facilities.
**Contac: 647.542.4439**

## வாடகைக்கு
**4 BR, 3 BR, 2 BR, 1 BR**
**House, Condo, Basement**
வாடகைக்கு உள்ளது அழையுங்கள்.
**647.861.8240**

மேலும் பக்கங்கள் 14, 16, 17

## CONDO FOR RENT
**HWY 401 & KENNEDY**
3 Bedroom luxury condo. for rent. 1 Parking.
Close to all facilities.
Avail. December 01, 2020.
தொடர்புகளுக்கு : **416.464.3551**

## CONDO – TOWNHOUSE FOR RENT
Location: **9th Line & HWY 7,** directly facing **Stouffville** Hospital. Two bedrooms, Two full bathrooms (Ground level) with Parking & Locker room.
Available immediately.
**Call: 416.464.3551**

## HOUSE FOR RENT
**HARWOOD & ROSELAND**
Ajax, Ontario - For Rent – free hold townhouse - 2,000 sq.feet - 3 bedrooms – 2.5 bathrooms. 3 Bedroom. Hardwood Floor On Family/Living Room. Steps to Schools, Shopping, Parks. Spacious Kitchen W/O To Private Fenced Yard.
**Contact number: 647.656.6214.**

## HOUSE FOR RENT
**BRIMLEY & FINCH**
3 bedroom semi detached house for rent. 2 parking.
Close to all facilities.
Avail. December 01, 2020.
**416.298.0134 / 647.449.7709**

## HOUSE/BASEMENT FOR RENT
**TAPSCOTT & CROWTAIL**
1 bedroom basement for rent.
3 bedrooms house for rent In **SCARBOROUGH** area.
தொடர்புகளுக்கு:
**647.686.8590**

## HOUSE FOR RENT
**MARKHAM & DENISON**
4 bedrooms house for rent.
Parking. Close to all facilities.
Close to all facilities.
Avial. December 01, 2020.
தொடர்புகளுக்கு: **416.897.3195**

## SALE / RENT
**MARKHAM & SHEPPARD**
4 bedroom & 3 washroom house for **Sale.**

**NEILSON & SHEPPARD**
2 bedroom & 2wasroom Houses for **Rent.**
Kannan Kankesu: **416.834.4200**

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

## திருமணசேவை

திருமண சேவைக்கு

தொடர்பு கொள்ளவும்

**905.607.3896**

## HELPER WANTED

வீட்டுத் திருத்தவேலைகளுக்கு முழுநேர உதவியாளர்கள் தேவை

செல்வா: **416-824-0580**

## OFFICE SPACE FOR RENT

**MIDDLEFIELD & FINCH**

Avail. immediately.

தொடர்புகளுக்கு:

**647.296.7932**

## BASEMENT FOR RENT

**Neilson & Military Trail**

Two bedroom basement for rent, Separate Entrance at two bed rooms basement , kitchen and washroom is available for rent. Walking distance to School,bus stop, Centennial College and UOTS.

Parks and Grocery stores, hospitals are within 5 minutes walking distance. One parking available, Any time available.

**Contact me : 647.290.3904.**

## BASEMENT FOR RENT

**AUDLEY & ROSELAND AJAX**

1 Bedroom + Den - next to bus stop, close amenities, parks, school and restaurants. No pets or smoking, parking included, separate laundry 30% utilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416-895-5219**




## வேலை வாய்ப்பு / HELP WANTED

**தமிழ் உணவகம்** MCCOWAN & HWY 7 (MARKHAM)

**வாடிக்கையாளர் சேவை / Cashier**

FULL / PART TIME. TRAINING PROVIDED

Pleace Call: **647.802.7021**

## AZ/DZ DRIVERS WANTED

Experienced drivers wanted immediately

(At least one year) for long & short run with in Canada. Full time, Part time & on call. SPS Transporation Private LTD. **647.528.2224 / 647.830.4644**

### வீடு வாடகைக்குபெற்றிட/கொடுத்திட

வாடகைக்கு வீடுகள், Condo., Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட

அழையுங்கள்: **647.402.2937**

மேலும் பக்கங்கள் 14, 15, 16, 17

## DRIVER/WAREHOUSE WORKER WANTED

We are looking for a driver/warehouse worker with clean driver's record. Must have G licence. Tamil/ Hindi or Punjabi speaking. Monday to Friday 9am - 5:30pm. Up to $20 Per hour.

Hiring Immediately.

All inquiries to be emailed to: **pankajs37@hotmail.com**




## ONLINE MATH TUTORING

**Canadian female college professor**

currently teaching **Math online** for Grade 6, 7, 8, and 9

- **Free first lesson**
- **Abi 289.988.9202**
- **ajaxprivatetutor@gmail.com**



**வாடகைக்கு கொடுப்பவர்களின் கவனத்துக்கு!**

வாடகையாளரை நீங்கள் தெரிவு செய்யும்போது குறிப்பிட்ட வாடகையாளரின் தகவல்களைப் பெறுவது, எதிர்காலச் சிக்கல்களை நீக்கும். தகுந்த வாடகையாளரைத் தெரிவு செய்வதற்கு குறிப்பிட்டவரின் முழுத்தகவல்களைப் பெறுவதுடன் அவரைப்பற்றிய தகவல்களை கணினியின் உதவியுடன் உறுதி செய்வதும் நல்லது. அத்துடன் அவரைப்பற்றி அறிந்து கொள்வதற்கான வேறொருவரின் (Personal Reference) தொலைபேசி எண்ணையும் பெற்று வாடகையாளர் பற்றி அறிந்து கொள்ளுங்கள். (வாடிக்கையாளர் பற்றிய தகவலைப் பூர்த்தி செய்வதற்கான பத்திரம் (Rental application form) தேவைப்பட்டால் விளம்பரம் பத்திரிகையுடன் தொடர்புகொள்ளவும்.

# wpm Property Management

***Markham*** **- Markham / Major Mackenzie – Bsmt**
(2 Brm + 1Bath) Great Location. Completely Renovated. Close To Ttc, Hwy 407, Schools, Hospital, Go transit. 1 Parking **[Asking $1550/m]**

* ***Scarborough*** **– Ellesmere Rd / Military trail – Bsmt**
2 Rooms Available for Students Or Professional. Rent included Utility & Internet. Walking distance to U Of T Scarborough. Close to Ttc & Hwy 401. **[Asking - $550/m]**

* ***Scarborough*** **– Ellesmere Rd / Military trail – Bsmt**
2 Rooms Available for Students Or Professional. Near U Of T Scarborough / Centennial College. Close to Ttc & Hwy 401. **[Asking each- $550/m]**

****Toronto*** **- York St / Harbour St – Condo Apt**
(1 Brm + 1 Bath) Located In Prime Downtown Toronto. Walk To Financial District, Harbour Front, Public Transit, Union Subway And Go Station. **[Contact 647-913-9241]**

****Scaroborugh*** **– Brimley & Ellsemere - Condo Apt**
(1+1 Brm + 1 Bath) Few Minutes Drive To The Hospital And Hwy 401. Convenient Location For All Needs. Well Maintained Building With 24/7Security, Has Gym And Swimming Pool. **[Asking each- $1900/m]**

****Scaroborough*** **– Kennedy & Hwy 401- Condo APt**
(1 Brm + 1 Bath) 1 Parking Available. Close To 401, Shopping, Library, Restaurants And Ttc **[Asking each- $1695/m]**

****Scarborough*** **–Midland / S Of Lawrence - Detached**
(4Brm + 2Bath) Close To All Amenities Including Both Ttc Subway And Go Station, Schools, Parks, And Shopping. **[Asking each- $2650/m]**

****Brock*** **– King & Mara Rd- Detached**
(4 Brm + 3 Bath) Double Garage. Walking Distance To Park, School, Marina, Golf, Banks And Shopping **[Asking each- $2500/m]**

➡ வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு நல்ல வருமானம் தேட விரும்புகிறீர்களா? அல்லது

➡ ஏற்கனவே நீங்கள் வாடகைக்கு விட்டிருக்கும் வீட்டில் வாடகைப் பிரச்சனைகளின் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைக்க நம்பிக்கையான நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

➡ நீங்கள் ஏற்கனவே வாழ்ந்துவரும் சொந்த வீட்டிலிருந்தே கடனை எடுத்து வீட்டை வாங்கும் தகுதி உங்களுக்கு இருக்கலாம்.

இத்துறையில் எனது 32 வருட அனுபவமும் எமது (WPM) Property Managemant நிர்வாகமும்
இதை உங்களுக்கு திருப்திகரமாக செய்து தரும் என்பதை முழுதாக நம்பலாம்.

**நம்பிக்கையுடன் அழையுங்கள்: கரு கந்தையா 416.616.7278**

**MANAGING RESIDENTIAL PROPERTIES**
**Watsonpm1989@gmail.com**

# முதலீட்டாளர்களே! நீங்கள் ஓய்வெடுங்கள்!!

## உங்கள் வீட்டை வாடகைக்கு கொடுத்து பராமரிக்கும் வேலையை நாங்கள் செய்து தருவோம்!!

**எமது சேவைகள்:**

- வீட்டின் சரியான வாடகையைத் தீர்மானிப்பது.
- வீட்டைச் சந்தைப்படுத்தி அதை விசாரிப்பவர்களுக்கு மேலும் தகவல் தருவது.
- தகுதியான வாடகையாளர்களை கூட்டிச் சென்று வீட்டைக் காட்டுவது.
- வாடகைக்குப் பெற விரும்புவோரின் வேலை வருமானம், நம்பகத்தன்மை என்பவற்றை உறுதி செய்து கொள்ளுதல்.
- தகுதியான வாடகையாளருடன் வாடகை ஒப்பந்தத்தை செய்து கொள்ளுதல்.
- வாடகையாளர் குடியேற முன்னரும் பின்னரும் வீட்டின் நிலையை கவனித்துக்கொள்ளுதல்.
- சரியான திகதியில் வாடகைப்பணத்தை அறவிட்டு வீட்டுரிமையாளரின் வங்கிக்கணக்கில் வைப்பிலிடுதல்.
- பிரச்சனை தரும் வாடகையாளர்களை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபடல்.
- வீட்டில் திருத்த வேலைகள் தேவைப்படும் போது அதில் அனுபவம் வாய்ந்தவர்களை அனுப்பித் திருத்தும் முயற்சியில் ஈடுபடல்.
- வருட முடிவில் அந்த வீட்டின் வரவு செலவுக் கணக்கை உரிமையாளர்களுக்கு ஒப்புவித்தல்.
- வாடகை ஒப்பந்தத்தை புதுப்பித்தல்.
- வருடாந்த வாடகை அதிகரிப்பை அறிவித்தல்.
- வீட்டின் பெறுமதியில் ஏற்ற இறக்கத்தை அறிவித்தல்.
- திரும்பவும் வீடு உங்களுக்குத் தேவைப்படும் போதுசரியான வழிமுறை களைக் கையாண்டு பெற்றுத்தரல்.
- வாடகைக்கு விடக்கூடிய குறைந்த விலையிலுள்ள வீடுகளை கண்டுபிடித்து வாங்க உதவி செய்தல்.
- வாடகைக்கு விடுவதற்கு வீட்டில் என்ன திருத்த வேலைகள் அவசியம் என்று அறிவுரை வழங்குதல்.

***You can relax while we take care of your investment property!***

**WATSON**
PROPERTY
MANAGEMENT LTD

**Direct: 416-284-9999**
WatsonPM1989@gmail.com
80 Corporate Drive, Unit 207
Scarborough, ON, M1H 3G5



**Karu Kandiah** Director
30+ Years in Real Estate

# நாளும் புதிய பிறப்பு



நாளும் நாளும் புதிது
புதிதாகப்பிறப்போம்
ஆளும் விஞ்ஞான தொழில் நுட்ப
அறிவுகளையும் அறிந்திட முயல்வோம்
புதிய புதிய சிந்தனைகளில் மூழ்குவோம்
சான்றோர் சிந்தனைகளை நாளும்
சுவைப்போம்
முன்னோர் சரித்திரங்களை நல்ல
பாடமாகக்கொள்வோம்
இன்னார் இனியார் என்ற பந்தத்தை
மெல்லக்களைவோம்
வாழ்க்கைப்போராட்டத்தை
எளிமையாக்குவோம்

என் மகிழ்ச்சி என்னிடமே என்பதை
உணர்ந்தே
எள்ளளவும் பிறரில் குறை காணாது
காணும் ஒவ்வொருவரிலும்
சிவத்தைகண்டே
நம் கடமையச்செய்வோம்
பலன் எதுவானாலும் மகிழ்வுடன்
ஏற்றுக்கொள்வோம்

உறவுகள் பலவிதம்
உறவாடும் முறைகளோ தனி ரகம்
கனிவாகப்பேசுவோர், காய்ந்துபேசுவோர்
பணிவாகப்பேசுவோர், பாய்ந்து பேசுவோர்
வெளிப்படையாகப்பேசுவோர்,
பொடிவைத்துப்பேசுவோர்
கவர்ச்சியாகப்பேசுவோர் உள்ளவாறே
பேசுவோர்
தற்புகழ்ச்சி பேசுவோர்,
அகவயமாகப்பேசுவோர்
கற்றதன்படி இதமாகப்பேசுவோர்
மற்றவர் குறை பாடுவோர்
நிறைகளைப்பாராட்டி குறைகளைப்
பொருட்டாகக்கருதாது
நிறைகுடமெனப்பேசும் சான்றோர்கள்
இத்தனை மனிதர்கள் மத்தியில் நம்
நிலை
இது என்றே நாமே தீர்மானிப்போம்

நம் மனதை நாமே பக்குவப்படுத்துவோம்
இகழ்ச்சியும் புகழ்ச்சியும் ஒன்றாக
நோக்கும்
மன நிலையை மெல்ல
மெல்லப்பெறுவோம்
காணும் பொருள்கள் யாவற்றிலும்
கற்போம் பாடங்கள்
வாழ்வோம் கனவுகளை நனவாக்கியே
வாழும் துளிகாலத்தை இனிதாக்குவோம்.

- ரஞ்சி கதிர் -





# யோக சோதிடம்


கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361


## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை
மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

## ஒரு நிமிடம் சிந்தியுங்கள்!



பிறப்பு: அடுத்தவர் கொடுத்தது
பெயர்: அடுத்தவர் வைத்தது
கல்வி: அடுத்தவர் தந்தது
வருமானம்: அடுத்தவர் அளிப்பது
மரியாதை: அடுத்தவர் கொடுப்பது
முதல் மற்றும் கடைசி குளியல்: அடுத்தவர் செய்வது
இறந்த பின் சொத்துக்களை: அடுத்தவர் எடுத்துக்கொள்வது
இறுதிச் சடங்கு: அடுத்தவர் செய்வது

ஒரு நிமிடம் சிந்தியுங்கள்! இவ்வாறு எல்லாமே நம் வாழ்க்கையில் அடுத்தவர் துணையோடு இருக்கும்போது எதற்கு நான் என்னும் அகங்காரமும், பிரச்சினைகளும்? அன்புடனும் ஆதரவுடனும் ஒற்றுமையாக வாழ்வோம்.

# அமைதி



அமைதி அகிலமதில் நிலைத்திட வேண்டும்
மகிழ்ச்சியும் நிம்மதியும் மலர்ந்திடும் அப்போது
அமைதி காக்கும் ஐ.நா. சபை இருந்திடினும்
சிறு சிறு பூசல்கள் சிதறடிக்கும் அமைதியை
போரில்லா பூதலத்தை சிந்திக்க முடிவதில்லை
மனித மனம் குழப்பத்தில் குதூகலித்து விடுகின்றது
ஒருபுறம் மனிதனின் நிழற்படம்
மறுபுறம் மண்ணுலகின் வரைபடம்
உருக்குலைத்த ஆசான் கொடுத்தார்
சரி செய்யும்படி மாணவனைக் கேட்டார்
மனிதனைச் சரிசெய்தேன் மண்ணுலகு
சரியாகி விட்டது சாற்றினான் மாணவன்
மனித மனம் சாத்தானின் குடியிருப்பு
சகல அறிவுரையும் அவனை சாந்தப்படுத்துவதில்லை



நா.க சிவராமலிங்கம்

# கார்த்திகை இருபத்தேழு



கார்த்திகைப் பூவாக கார்த்திகை மாதமதில்
பூர்த்துக் குலுங்கிய புத்திர சிகாமணியின்
ஈர்ப்பான நாளினிலே எடுத்தோதும் பாக்களிது
ஏர்ப்பீரே எல்லீரும் ஏற்றமுடன் தாழ்வின்றி.

நடுகல்லாய்க் காட்சிதரும் நாயகரை வணங்குநாளில்
தடுத்தாலும் அஞ்சாது தாயக மண்ணுக்காய்
விடுதலைப் போரிலே வித்தாகிப் போனவரை
இடுக்கண்ணுக் கஞ்சாது ஒளிவிளக்கு ஏற்றினோமே.

அகல்விளக் கேற்றியே ஆழ்துயர் போவதற்காய்
தகவுடை மலர்தூவி தக்கார்க்கு மட்டுமன்றி
தகவிலர்க்கும் தற்கொடையால் தன்னுயிர் நீத்த
பகைக்கஞ்சா மறவர்க்கும் பற்றுடனே அஞ்சலித்தோம்.

பாதுகாப்புப் படையினரின் பரிசோதனைக் கஞ்சாதே
பொதுமக்கள் எழுச்சிகொண்டே பொறுப்புணர்ந்தே தீபமேற்றி
குதூகல மேதுமின்றி கூட்டுப் பொறுப்புடனே
பாதுகாப்புக் கிடையூறின்றி மலர்தூவும் அஞ்சலியே.

தாயகத்தில் மட்டுமன்றித் தமிழர்வாழ் தேசமெங்கும்
மாயக் கண்ணன் மதுசூதனன் பிரபாவின்
தூயநல் வாழ்வினை தூரதேச மெங்குமே
நேயமுடன் வாழ்த்தினரே நெறிதவறா வாழ்வினையே

பாராள் தலைவர்கள் பாசநிறை ஞானத்தால்
சீரான ஆட்சியென்று சிந்தித்து வாக்களித்தோம்
வேரான மொழிக்காயும் வெந்தழிந்த உறவுக்காயும்
பேராதர வேதுமில்லை இவ்வரசின் ஆட்சியிலே

செந்தமிழா சிந்திப்பாய் செம்மலவன் கற்பித்த
நிந்தையிலா வாழ்வும் நிரந்தர மல்லவென்றே
சிந்தை மகிழச் சிறப்பான ஒற்றுமையே
எந்தனுக்கு வேண்டுமென ஏற்றவன்தான் தம்பியனே!

முருகேசு மயில்வாகனன்




# கமலா ஹரிஸின் தலைமைப் பணியாளர் ரோஹினி லக்சுமி கொசோக்லு

ரோஹினி கொசோக்லு **Rohini Kosoglu**, அரச அதிகாரிகள் மற்றும் தேர்தலின் நிற்கும் வேட்பாளர்களுக்கு ஆலோசனை வழங்குவதோடு, பெரிய மற்றும் சிக்கலான அமைப்புகளை நிர்வகிப்பதில் நிபுணத்துவம் பெற்றவர். தேசிய பிரச்சாரங்கள் மற்றும் அமெரிக்க அரசின் தலமைச் செயலகம் (Capitol Hill) ஆகியவற்றில் உயர் பதவிகளில் பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றிய அனுபவமுள்ளவர்.




2017ஆம் ஆண்டு முதல், ரோஹினி அமெரிக்க செனற்றர் கமலா ஹரிஸின் மூத்த ஆலோசகராக அவரது அமெரிக்க செனற் அலுவலகத்திலும், ஜனாதிபதி வேட்பாளருக்கான பிரச்சாரமான "மக்களுக்காக கமலா ஹரிஸ்" (Kamala Harris for the People) நிறுவனத்திலும் பணியாற்றினார். கமலா ஹரிஸின் ஜனாதிபதி வேட்பாளருக்கான பிரச்சாரத்தின் தலைமைப் பணியாளரான ரோஹினி, $40 மில்லியன் பஜெட்டில் முந்நூறுக்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட ஒரு குழுவிற்கான விவாதம் தயாரித்தல், கொள்கை, தகவல் தொடர்பு மற்றும் செயல்பாடுகளை நிர்வகித்து மேற்பார்வையிட்டார். கமலா ஹரிஸின் ஜனாதிபதி வேட்பாளருக்கான போட்டிக்கு முன்னர், ரோஹினி, செனற்றல் கமலா ஹரிஸுக்குத் தலைமைப் பணியாளராகப் பணியாற்றினார். அவர் செனற் நீதித்துறை, உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் அரசு விவகாரங்கள் மற்றும் பஜெட் குழுக்கள் உள்ளிட்ட முக்கிய குழுக்களில் கமலா ஹரிஸின் சட்டமன்ற மூலோபாயத்தையும் தலைமையையும் வழிநடத்தினார்.

ரோஹினி, ஒரு அமெரிக்க செனற்றருக்குத் தலைமைப் பணியாளராகப் பணியாற்றிய முதல் தெற்காசியப் பெண்மணி ஆவார். அவரது பதவிக் காலத்தில் அந்தப் பொறுப்பில் பணி யாற்றிய ஒரே ஆசிய அமெரிக்கர் ஆவார்.

Capitol Hillஇல் ரோஹினி பணிபுரியும் காலங்களில் Senator Michael Bennet மற்றும் Senator Debbie Stabenow உள்ளிட்ட முன்னணி ஜனநாயகக் கட்சி செனற்றர்களுடன் பணியாற்றியுள்ளார். ரோஹினி, தனது பதவிக் காலத்தில், பொருளாதாரம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பை மையமாகக் கொண்டு கட்சி சார்பற்ற பல சட்டங்கள் குறித்த பேச்சு வார்த்தைகளுக்குத் தலைமை தாங்கினார். மிக முக்கியமாக, ரோஹினி, 2010இல் கட்டுப்படியாகக்கூடிய பராமரிப்பு சட்டத்தின் வரைவின் (Affordable Care Act) போது ஒரு முக்கிய ஆலோசகராகப் பணியாற்றினார்.

ரோஹினி, தனது சட்டமன்ற சாதனைகளுக்காக ஏராளமான விருதுகளைப் பெற்றுள்ளார். இதில் பெண்கள் பிரச்சார மன்றத்தின் 'உயரும் நட்சத்திரம்' (Rising Star Award), Pew Charitable Trust, சிறார் நீரிழிவு ஆராய்ச்சி அறக்கட்டளை (Juvenile Diabetes Research Foundation) மற்றும் தேசிய ஊரக சுகாதார சங்கம் (National Rural Health Association) போன்ற அமைப்புகளின் விருதுகளும் அடங்கும். ஜனநாயகத் தேசியக் குழு, தேசிய கல்விச் சங்கம் மற்றும் துணிகர மூலதனம் மற்றும் தொழில் முனைவோர் ஆகியவற்றிற்கான மையம், Kauffman Center for Venture Capital and Entrepreneurship ஆகியவற் றிற்கான சிறப்புப் பேச்சாளராகவும் இருந் துள்ளார். 2020 ஆம் ஆண்டில் ரோஹினி, ஹாவர்ட் கென்னடி கல்லூரி யின் (Harvard Kennedy School) அரசியல் நிறுவ னத்தில் பேராசிரியராகவும் பணியாற்றினார். ரோஹினி, மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தில் B.A. மற்றும் ஜோர்ஜ் வோஷிங்டன் பல்கலைக்கழகத்தில் சட்ட மன்ற விவகாரங்களில் முதுகலை மானிப்பட்டமும் பெற்றார். அவர் தற்போது தனது கணவர் மற்றும் மூன்று மகன்களுடன் வோஷிங்டன் D.C. பகுதியில்



வாழ்ந்து வருகிறார்.

New Jerseyஇல் பிறந்து வளர்ந்த ரோஹினி, யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். இவரது தந்தை அவசர சேவை வைத்தியர் விஜயதேவேந்திரா ரவீந்திரன், தயார் ஷோபனா ரவீந்திரன். இவர்கள் 1980இல் யாழ்ப்பாணத்தில் இருந்து அமெரிக்காவுக்குப் புலம் பெயர்ந்தனர். ராமன் ரவீந்திரன் என்று ஒரு சகோதரரும் ரோஹினிக்கு இருக்கின்றார்.


வாழ்க்கையில் ஜெயிக்கவேண்டுமென்றால் அடுத்து என்ன செய்ய வேண்டுமென்று பார்க்கவேண்டும். அடுத்தவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்க்கக்கூடாது!



# ஆழியவளை

## தொடர் கட்டுரை

### யாழ்ப்பாணத்துக் கடலோரக் கிராமம் ஒன்றின் மரபும் மாற்றமும்



கந்தசாமி முத்துராஜா

## இ. திருமணம்

இவ்வூரில், திருமணத்தைக் 'கலியாணம்' செய்தல், சடங்கு முடித்தல் என்ற தொடர்கள் கொண்டே குறிப்பிடுவர். இங்கு திருமணங்கள் பெரும்பாலும் பேசியே செய்யப்படும். அதாவது பெண் கேட்டு அல்லது மாப்பிள்ளை கேட்டுச் செல்லுதல் 'பேசுதல்' எனப்படும். சில வேளைகளில் இளைஞனோ, யுவதியோ விரும்பி முடிப்பதும் உண்டு. காதல் திருமணத்துக் கான இன்னொரு பெயராகவே இதனைக் கொள்ளல் வேண்டும். அப்படி முடிப்பவர்கள் ஓடி முடிப்பதும் (உடன்போக்கு) உண்டு.



பெரும்பான்மையான திருமணங்கள் பேசியே முடிக்கப்பெறும். பேச்சின் தொடக்கம் உறவினர்கள் நண்பர்கள் மூலமாகவே விசாரித்தறிவதாக இருக்கும். முதற் கட்டத்தில் இணக்கம் தெரிவிக்கப்பட்டால் சாதகப் பொருத்தம் பார்க்கப்படும். சாதகப்பொருத்தம் பார்ப்ப தற்கென ஊரிலுள்ள சாத்திரியாரிடம் சென்று கேட்பர். பொருத்தமாயின் சீதனப் பேச்சு வார்த்தை நடைபெறும். இதனைக் 'கொடுக்கல் வாங்கல் பேச்சு வார்த்தை' என்று கூறுவர். அண்மைக்காலத்தில் சமூக மாற்றங்கள் ஏற்படுவதற்கு முன்னர் சீதனம் என ஒன்று கொடுக்கப்படுவ தில்லை. பெண்ணுக்குப் பெற்றோர் இயன் றளவுக்கு நகை கொடுப்பர். பெரும்பாலும் தோடு, காப்பு, அட்டியல் கொடுக்கப்படும். வசதியுள்ள சிலர் சீவிப்பதற்கான வளவுக் காணியைக் கொடுப்பர். கலியாணம்பேசி முடிவானதும், முதலில் பெண் வீட்டாரும் அதைத் தொடர்ந்து மாப்பிள்ளை வீட்டாரும் முறைப்படி, வேறு வேறு நாட்களில் பணியாரப்பெட்டி கொண்டு செல்வர். இதைப் 'பணியாரப்பெட்டி' மாற்றுதல் என்று கூறுவர்.

வசதியுள்ள சிலர் முற்றத்தில் பந்தல் போட்டுக் 'கலியாண வீடு' செய்வர். வசதி யற்றோர் 'அடக்கமாக' நெருங்கிய உறவுக் காரர் மட்டில் கலியாணப் பந்தலின்றி நடத்துவர். பஞ்சாங்கத்தில் பார்த்தெடுத்த நல்ல நாளில் பெற்றுப்பெருகிக் கணவனுடன் வாழ்ந்துகொண்டிருக்கும் பெண் ஒருத்தி, பூதாக்கலத்தில் உலை ஏற்றிச் சோறுகறியைச் சைவமாகச் சமைப்பார். 'பூதாக்கலம்' எனும் சொல்லுக்கான விளக்கம் சரியாகத் தெரியவில்லை. இது, ஆய்வு செய்யப்படவேண்டி உள்ளது. மணமகன் புதிய வேட்டிசால்வையுடன் மேலங்கியும், மணமகள் புதுப்புடவை சட்டையும் அணிந்துகொள்வர். அடுக்களைக்குள் மணப்பெண் சோறுகறியைத் தலைவாழை இலையில் மணமகனுக்குப் பரிமாறுவாள். மாப்பிள்ளை உண்டு முடிந்ததும், அவர்விட்ட மிச்ச உணவுடன், அதே இலையில் மணமகளும் உண்ணுவாள். பின்னர் முதலிரவுக்காக அவர்கள் இருவரையும் பெண்கள் அழைத்துச் சென்று வீட்டினுள் விடுவர்.

இரத்தச்சொந்தமோ அல்லது தூரத்துச் சொந்தமோ 'மச்சான் மச்சாள்' உறவு முறையில் திருமணம் நடைபெறும். தமிழ் நாட்டார் போல் இங்கு 'மருமகள் மாமன்' திருமணமுறை வழக்கில் இல்லை. உறவு மாறிக் கலியாணம் முடிப்பது மிகமிக அரிது. குழந்தைகளிலேயே 'சாணை போடுதல்' என்று சொல்லிக் கலியாணம் பேசிவைத்திருக்கும் பெற்றோரும் உண்டு.

## ஈ. இறப்பு

ஒருவர் இறந்ததும் அயலூர்களிலுள்ள அவரது உறவுக்காரருக்குச் செய்தி அறிவிப்பர். காலால் நடந்து சென்றே செய்தி சொல்வர். மிதிவண்டி (சயிக்கிள்) போன்ற வாகனவசதிகள் 1950-களுக்கு முன்னர் இங்கு இருந்ததில்லை. கிராமத்தின் கரையோரமாக ஊரைக் கிழக்கு மேற்காக ஊடறுத்துச்செல்லும் களிமண் வீதியும் இல்லை. எனவே மணற்பாதை வழியாகத்தான் நடந்து செல்லவேண்டும். செத்தவீட்டுக்குப் பறை அடிப்பதற்குப் பணவசதியுள்ளோர் கற் கோவளத்திற்குச் செய்தி அனுப்புவர். சிலர் சைவக் குருக்களை அழைத்துச் சவக்கிரிகையும் செய்விப்பர்.

கூலிவேலை செய்வோர் அவர்களுடைய அடிநிலைப் பொருளாதாரத்தின் காரண மாகச் சவக்கிரிகை செய்விப்பது பறை பிடிப்பது என்பனவற்றைத் தவிர்ப்பர். அம்பட்டர் சங்கு ஊத, சீனவெடியைக் கொளுத்திக்கொண்டு எளிமையாக ஆடம் பரமின்றி அவர்களது சவ ஊர்வலம் கடலையைச் சென்றடையும். சவத்துக்கு அரப்பு எண்ணெய் வைத்துக் குளிப்பாட்டுவர் பெண்ணுக்கு முறை மச்சாள்மார் மூவர் 'குடமெடுத்து' அழுதழுது ஒப்பாரி சொல்லிக்கொண்டே குளிப்பாட்டுவர். இது, தாளமுடியாத ஒரு சோகக் காட்சியாகக் கூடியிருப்போரது நெஞ்சை உருக்கும். ஆண்கள் இறப்பின் முறை மச்சான்மார் குடம் எடுப்பர். முறை மச்சான் முறைமச்சாள் என்பது தாய்வழி மைத்துனர், தகப்பன் வழி மைத்துனர், மனைவி வழி மைத்துனர்/மைத்துனி என்போராவர். இறந்தவர் விவாகம் ஆகாதவர் எனின் தந்தை தாய் வழியில் இருந்தே மூவர் வருவர்.

ஊர்ப்பெரியவர் ஒருவர் சவத்துக்குக் கற்பூரம், சாம்பிராணி காட்டித் தேவாரம் பாடுவார். பின்பு சவத்தைப் பாடைக்குள் வளத்துவர். அதன்பின்னர் பெண்கள், பாடையை வட்டமாகச் சுற்றிச்சுற்றி, மார்பில் அடித்தடித்து ஒப்பாரிசொல்லி அழுவர். இதைப் 'பாடைசுற்றி' அடித்தல் என்பர். அவர்கள் மூன்றுமுறை வலம் வந்ததும் நான்கு உரிமைக்கார ஆண்கள், பாடையின் நாலு கட்டில் கால்களையும் தோளில் வைத்துச் சுடலைக்குக் காவிச் செல்வர்.

பாடை, சிவிகைபோல் அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கும். பறையர் சவப்பாடைக்கு முன்னே பறை அடித்துச் செல்வர். அம்பட்டர் சங்கு ஊதிக் கொண்டே பறைக்குப் பக்கத்தில் செல்வர். சுடலையைச் சென்றடைந்ததும் பாடையை இறக்கி வைத்துவிட்டு இறந்தவரின் உடலை விறகு மேடையில் வளர்த்துவர். அதன்பின் இறந்தவருக்கு வாய்க்கரிசி போடுமாறு அம்பட்டர் அழைப்பர். வாய்க் கரிசிக்கென அவர் அரிசி தேங்காய்ச் சொட்டு ஆகியவற்றை மஞ்சள் தூளில் கலந்து ஒரு சிறு பெட்டி நிறைய வைத்திருப்பர். உடலின் கழுத்தடியின் கீழ் போர்த்தப்படும் ஒரு சேலை மீது சில காசும் வைப்பர். அப்பணம் யாவும் அம்பட்டருக்கே உரியது. சுடலைக்குப் பெண்கள் செல்லாததினால் வாய்க்கரிசியை வீட்டிலேயே போட்டுவிடுவர்.

கொள்ளி வைப்பவர் தனது இடக்கையில், கொள்ளி வைப்பதற்காக ஒரு புறம் நெருப்புத் தணலாக உள்ள சந்தனக் கட்டையை வைத்திருப்பார். குடம் வலது புறத்தோளில் இருக்கும். ஒவ்வொருதரம் விறகு மேடையைச் சுற்றி வரும்போது தலைமாட்டடியில் நிற்கும் அம்பட்டர் அந்தப் பானையில் ஓட்டை விழும் வகையில் மெல்லியதாகக் கத்தியால் கொத்துவார். மூன்றாவது தடவை சுற்றி முடிந்ததும் கொள்ளி வைப்பவர் தலை மாட்டில் எதிர்ப்புறமாக நோக்கிக் கொண்டு குந்து நிலையில் இருந்து குடத்தைப் பின்புறம் விழுத்திவிட்டு, தலைப்புறத்தில் கொள்ளியைச் செருகிவிட்டு திரும்பிப் பார்க்காமல் வீடுநோக்கிப் புறப்படுவார். அவரது உற்ற உறவினர்கள் அல்லது நண்பர்கள் அவரைத் தாங்கிப் பிடித்துக் கூட்டிச் செல்வர். அப்பொழுது சுடலைக்கு வந்த பெரும்பாலானோர் அவரைப் பின்தொடர்ந்து சென்று விடுவர்.

உடலின் தலையில் கொள்ளி வைத்ததும் சவம் எரிக்கப்படும். தாய்க்கு அவரின் கடைசி மகனும் தந்தைக்கு அவரின் தலைமகனும் கொள்ளிவைப்பர். பிள்ளை இல்லாத குடும்பத்தில், மனைவி இறந்தால் கணவன் கொள்ளிவைப்பார். கணவன் முன்னால் இறந்தால் அவருக்கு அவரது ஆண் சகோதரம் இல்லையேல் நெருங்கிய ஆண் உறவினரும் கொள்ளி வைப்பர்.

சவத்தை எரிப்பதற்கென்று குறிப்பிட்ட சாதியினர் இங்கு இல்லை. ஊரவர் சிலர் சுடலையில் நின்று எரிப்பர். சவம் எரிப்பவர்களுக்குக் குடிப்பதற்குச் சாராயம், கள்ளுக் கொடுக்கப்படும். சுடலைப் படையலான அரிசி, மரக்கறி, பலகாரங்கள் பறையருக்கு உரியவை. சுடலையால் வந்ததும் அம்பட்டர், வண்ணாருக்கு, 'உடன் கஞ்சி' ஊத்துவர். அவர்கள் உடன் கஞ்சியைக் குடித்ததும் வீடு செல்வர். பறையருக்குக் கள்ளு, சாராயம் குடிக்கக்கொடுத்துப் பக்கத்து வீட்டில் உணவும் கொடுக்கப்படும்.

மூன்றாம் நாள் ஊர் மக்கள்கூடிப் பறை மேளம் முழங்கச் 'சாம்பல் காடாத்துச்' செய்வர். இறந்தவரின் சாம்பலைப் புதுப் பானையில் போட்டுக் கொள்ளிவைத்தவர் தோளில் சுமந்துவருவார். அவரது சகோதரன்மார், சகோதரன் இல்லாவிடில் நெருங்கிய உறவினர் எலும்புகலந்த சாம்பலைக் கடகங்களில் போட்டுத் தோளில் காவிவருவர். ஊர்வலமாகச்

## இளமையில் கற்றிட இளகி வருமே கல்வியும்!

கற்றது கைம்மண்ணளவு
கல்லாததோ உலகளவு
பெற்றது அனுபவ அறிவு
பெருமைமிகு முன்னோர் நிறைவு
உற்றது எமக்குண்டெனில்
உவந்து அறிவுகொள்ளல்
நற்றது என்றுநயந்து
நாடுதல் காற்போர் உயர்வு!

கொற்றம் சிறக்கும்
கொண்ட குடிசிறக்கும்
சுற்றம் சிறக்கும்
சுகம்மிகு வாழ்வுசிறக்கும்
நற்றமிழும் நாடிச்சிறக்கும்
நன்மைக ளோங்கிச்சிறக்கும்
பெற்ற ஞானம்சிறக்கும்
பெருமைதரும் கல்வியினால்!

கற்றிடக்கற்றிடக் கல்வியும்
கனிந்துவரக் காணலாம்
பொற்பதம் பணிந்துநிதம்
பொறுப்புடன் நாமகளைத்தொழுதிட
அற்புதமான ஆயகலைகளும்
அணைந்துவரும் அனைவர்க்கும்
முற்றிய அறிவினைப் பேணுதல்
முக்கியம் கற்போர்தமக்கு!
கண்டவை கற்றிடக்கற்றிட
கற்றவர் பண்டிதராவார்

உண்டவை யாவுமேசெமித்திடும்




17.11.2020 மாணவர் தினம்

உரிய வயதுடையோர்க்கு
பூண்டவை யாவும்அழகுறும்
புதுமணம் கொண்ட பெண்ணிடம்
கொண்டவையாவும் பலன்தரும்
கொஞ்சும் இளயவயதோர்க்கே!

இளமையில் கல்வியைக்கற்றிட
இளகிவருமே கல்வியும்
உளமதில் உறுதிபூண்டிடில்
உற்றகல்வியில் உயர்வுண்டு
அளவுடன் உண்ணுதல்செய்திடின்
ஆரோக்கிய முள்ளதுஉடலுக்கு
அளவின்றிக் கற்றுதல்செய்திடின்
ஆரோக்கிய முள்ளதுவாழ்வுக்கு!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

# ஆழியவளை...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

சுடலையிலிருந்து வந்து, இறுதியில் சாம்பலை வங்கக் கடலில் கரைத்து விடுவர்.



சாம்பலன்று வீட்டில் சைவச் சோறுகறி சமைப்பர். அன்று அம்பட்டர் வண்ணாருக்குப் 'பச்சை கட்டுவர்'. பச்சை கட்டுதல் என்பது, சமைக்காத அரிசி காய்கறி வகைகளைக் குடிமக்களுக்குக் கொடுக்கும்போது, அவர்கள் தாம் கொண்டுவந்த சீலைப்பையில் அல்லது வெளுத்த புடவையில் அவற்றைப் பொட்டலமாகக் கட்டிக்கொண்டு தமது வீடு செல்வதைக் குறிக்கின்ற ஒரு மரபுச்சொல்லாகும். இதில் அம்பட்டருக்கு மூன்று கொத்து அரிசியும் அதற்கேற்ற காய்கறியும், வண்ணாருக்கு இதைப்போல் இருமடங்கும் கொடுப்பது வழக்கம். பறையருக்கு வேட்டி சால்வையும் பணமும் வழங்கப்படும். சாம்பலுக்கு வந்த ஏனையவர்களில், கோயில் துடக்குக் காப்பவர்கள் மட்டும் 'சாம்பல் சோறு' சாப்பிடாமல் செல்வர். மற்றைய எல்லோர்க்கும் பந்தி இருத்திச் சாப்பாடு வழங்கப்படும். சாம்பலுக்கு வந்தவர்கள், செத்தவீட்டுக்காரருக்குத் தம்மாலியன்ற பண உதவி (மொய்) செய்வர். வீட்டுக் காரர்களில் ஒருவர் கொப்பிவைத்து மொய் கொடுப்போரின் பெயர் விபரங்களைப் பதிவார்.

பிரேதம் எடுத்த நாளிலிருந்து எட்டாம் நாள்வரை நெருங்கிய உறவினர், இறப்பு வீட்டிற்குத் தினமும் வந்து, பலதையும் 'பேசிப்பறைஞ்சு' இரவில் படுத்துறங்கிக் காலையில் தமது வீடு செல்வர். இதை 'இழவு காத்தல்' என்று சொல்வர். எட்டாம் நாள்வரை செத்தவீட்டில் 'உலையேற்ற' மாட்டார்கள். அயல் சனங்களும் உறவுக் காரரும் தினமும் உணவு கொண்டுவந்து கொடுப்பர். சகோதரங்கள் போன்ற இரத்தச் சொந்தக்காரர் சிலர், முப்பத்தோராவது நாளாகிய அந்தியேட்டி மட்டும் இழவுகாப்பதும் உண்டு. இழப்பின் துயரத்தைப் படிப்படியாகக் குறைத்து, இறந்தவரின் வீட்டினரைத் திரும்பவும் சுமூகவாழ்விற்குள் கொண்டு வருவதற் கான ஓர் 'உளவியல் மருத்துவமாக' இவ்வழக்கம் செயற்படுகின்றது போலத் தெரிகிறது.

எட்டாம் நாளில் இறைச்சி, மீன்கறி, பொரியல், பிட்டுவகை, மரக்கறி, சோறு, கள்ளு, சாராயம், சுருட்டு, முதலிய வற்றுடன் 'எட்டாம் சடங்கு' மச்சமாகப் படைப்பர். அன்று குடிமக்களை முதலில் இருத்தி, அவர்களுக்கு வாழை இலையில் அல்லது தாமரை இலையில் உணவைப் பரிமாறுவர். அவர்கள் உண்டபின்பு அவர்களுக்குக் 'கட்டுச்சோறு' கொடுத்தனுப்புவர். அதன்பின், அங்கு வந்திருக்கும் அயலவர் உறவுக்காரர் நண்பர்களைப் பந்தியாக இருத்தி, உணவைப் பரிமாறுவர்.

முப்பத்தோராவது நாளில் 'அந்தியேட்டி' கொடுப்பர். சிலர் கீரிமலையில் அந்தியேட்டி செய்து 'கல்லுப்போட்டுவிட்டு' வந்து, வீட்டில் சைவச்சோறுகறி சமைத்துப் படைத்து, வருவோர்க்குப் பரிமாறுவர். அந்தியேட்டிச் சடங்கின் முக்கியமான அம்சம் கல்லுப்போடுதல் என்னும் சடங்காகும். அந்தியேட்டிக் கிரியைகளின்போது சுட்ட செங்கல்லில் ஒரு பருவரைவான ஆண் / பெண் படத்தைக் கீறி அதற்கு விசேட பூசைகள் செய்து மிக முக்கியமான (இறந்தவர் உண்ட சாப்பாடுகளைக் கொண்ட படையல் படைத்து வணங்கிவிட்டுச் சுடலையில் இருந்து கொண்டுவந்த அஸ்தியினையும் இந்தக் கல்லினையும் அந்த நீர்நிலையில் போடுவர். இதனைக் 'கல்லுப்போடுதல்' என்பர். சவண்டி என வாய்மொழி வழக்காகக் குறிப்பிடப்படும் சவண்டீகரணக் கிரிகை, அந்தியேட்டியில் அன்று கல்லுப்போடச் சென்றதன் பின்பு வீட்டைக் கழுவிய பின்னர் செய்யப்படும். அது பிராமணக் குருக்களால் செய்யப்படுவதாகும்.


வசதியுள்ள சிலர் தமது வீட்டிற்கே சைவக் குருக்களை வரவழைத்து அந்தியேட்டி செய்து, கடலில் கல்லுப் போடுவர். கிரிகை செய்யும் குருக்களுக்குத் தாக சாந்திக்காகத் தெங்கு இளநீர் வெட்டிக் கொடுக்கப்படும். ஆறு, குளம், கடல் ஏதாவதொரு நீர்க்கரையில்தான் அந்தியேட்டி செய்யப்படுவது வழக்கம். சைவக் குருக்களுக்கு வேட்டி, சால்வை, அரிசி, காய்கறி, பணம் தானமாக வழங்கப்படும். அன்று குடிமக்களுக்கும் வேட்டி, சால்வை, அரிசி, காய்கறி, பணம் என்பன வழங்கப்படும்.

இறந்த முதலாவது ஆண்டின் நிறைவில் கொடுக்கப்படுவது 'ஆண்டுத்திவசம்' என்றும், தொடர்ந்துவரும் ஆண்டுகளில் கொடுக்கப்படுவது 'திவசம்' என்றும் அழைக்கப்படும். வசதியற்ற சிலர் திவச தினங்களின் அன்று தங்கள்மட்டில் வீட்டில் 'காய்ச்சிப்படைப்பர்' (விசேசமாய் நாலு, ஐந்து கறியுடன் சோறு படைத்தல்). குடிமக்களும் வறியவர்களும் பெரும் பாலும் திவசம் செய்வதில்லை. இறந்த குடிமக்களைப் புதைப்பர். எரிக்கும் வழக்கம் அண்மைக்காலம் வரை அவர்களிடத்தில் இல்லை.

இவ்வூர்களில், 1950களுக்கு முன்னர் 'அம்பட்டர் சுடலை', 'வண்ணார் சுடலை' என்று தனிச்சுடலைகள் இருந்தன. சுடலை என்று பேச்சுவழக்கில் கூறப்பட்டா லும் உண்மையிலே அவை 'இடுகாடு'கள் தான். தற்போது கரையாரின் சுடலைக் குள்ளேயே ஒருபக்கமாகப் புதைக்கின்ற னர். தற்போது எல்லோருக்கும் ஒரே கடலைதான். அண்மித்த ஆண்டுகளில் நளவர் ஒருவரின் தந்தை இறந்தபோது, கரையாரும் ஒன்றுகூடி அவரைப் பொதுச்சுடலையில் எரித்தனர். அவருக்கு அந்தியேட்டியும் செய்யப்பட்டது. இத்தகைய நிகழ்வுகள், இவ்வூர் மக்களின் முற்போக்குச் சிந்தனையின் வளர்ச்சியைக் காட்டுகின்றன. அத்துடன் பண்பாட்டு மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருப் பதையும் தெரிந்துகொள்ள முடிகிறது.

தொடரும்...)













# MORTGAGE SOLUTIONS

## SAVE UPTO 75% REFINANCE

## MONTHLY SAVING $2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credit Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.9% | | $1,605.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440

info@mortgagesolutions.ca

www.MortgageSolutions.ca

Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

## GET APPROVED WITHIN 24 HOURS

## $375 Mo.

# 416.298.2777

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5